நந்தன
ஆனி

அ 3 ணா

மகிழ்ச்சி

பீடி சக்ரவர்த்தி த.பி.சொக்கலால் ராம்சேட் பீடி

★ உலகத்தில் மிகப் பிரசித்தி பெற்றதும் ★
★ "பீடிச் சக்கரவர்த்தி" என்று கவர்ண்மெண்ட் பட்டம் கிடைக்கப்பெற்றதும் ★
★ தங்கமெடல் பரிசு பெற்றதும் ★
★ சோம்பலைப் போக்கி சுறுசுறுப்பு உண்டாக்குவதும் ★
★ இந்தியா, சிலோன், மலேயா முதலிய ஜலப் பிரதேச நாடுகளில் பிரக்கியாதி பெற்றதும் ★
★ தினமும் ஆயிரக்கணக்கான மக்களுக்கு தொழில் கொடுப்பதும் ★
★ காரம். குணம், மணம் நிறைந்ததும் ★
★ எங்கும் எப்பொழுதும் கிடைப்பதும் ★

சொக்கலால் ராம்சேட் பீடியே!

புரோப்ரைட்டர்:

T. P. S. ஹரிராம் சேட்,

த. பி. சொக்கலால் ராம்சேட் பீடித் தொழிற்சாலை,

முக்கூடல் P.O. (திருநெல்வேலி ஜில்லா)

விருதுநகர்
ஸ்ரீராதா &
சென்ட்ரலில்
13—6—52 முதல்
எம். ஜி. ராமச்சந்திரன்,
பி. எஸ். கோவிந்தன்,
நரசிம்மபாரதி,
மாதுரிதேவி நடிந்த
"என் தங்கை"
(தமிழ்)
வெற்றிகரமாக
நடைபெறுகிறது!
வருகிறது!
சென்ட்ரலில்
21—6—52 முதல்
M. N. நம்பியார், B. S. சரோஜா,
D. பாலசுப்பிரமணியம்,
P. S. சிவபாக்கியம்,
T. E. மாதவன், D. முத்துலக்ஷ்மி
மற்றும் பலர் திறம்பட நடித்த
மாடர்ன் தியேட்டர்ஸ்
கல்யாணி

CONNEMARA PUBLIC LIBRARY
1 SEP 1955 25 SEP 1955

மகிழ்ச்சி

சீர்திருத்த மாத இதழ்
ஆசிரியர்: நா. சதானந்தம்
விருதுநகர்.
தி. ஆ. 1983—ஆனி 1.
ஆண்டு 4] 14-6-52 [மாதம் 1

பொருளடக்கம்

சென்னை சர்க்காரின்......... 2
நான்காம் ஆண்டு! 5
தெரிந்துகொள்ளுங்கள் 7
இதுநிஜமா?—வாகன் 8
கண்ணீர்த் துளிகள்
—ஏ. வி. பி. ஆசைத்தம்பி 9
ஜார்ஜ் வாஷிங்டன்
—R. T. ராஜன் B. A. 13
சினிமாச் செய்திகள்—பெல் 15
காதற்கடல்—தொடர்கதை
விருதை மகிழ்நன் 17
சந்தேகம் ஒழிக!—ஜாலி 24
ஒருநாள் கணவன்—மதுசுரா 25
கொலைகாரன்—மாலி 30
அறிவுப் பூங்கா 37
அந்தநாளும் வந்திடாதோ!
வே.மு.இரா. புத்திரன் 38
எழுதிப்பழகணும்
—மி. வ. அந்தோணி 40
காஞ்சனா—விமர்சனம் 41
ஞாபகசோதனைப்போட்டி 3 45

கதைகளில் வரும் பெயர்கள்
கற்பனையே.

MADRAS 5 SEP 1955

சென்னை சர்க்காரின் உணவுக் கொள்கை வெற்றி பெறுமா?

தண்ணீரில் தன் கிளைகள் நிறைந்த கொம்புகளின் கம்பீர நிழலைக் கண்டு கர்வத்துடன் இறுமாந்திருந்த மான், வேடுவனைக் கண்டதும் உயிரைக் காத்துக்கொள்ள வேலியைத் தாண்டி ஓட எத்தனிக்கையில், வேலிக்கொடிகளில் கொம்புகள் சிக்கி அதன் உயிருக்கே உலை வைத்ததுபோல; தன் மனைவி பத்மினியின் அழகில் மெய்மறந்து பெருமைகொண்டிருந்த ரஜபுத்திர ராஜன் பீம்சிங்கிற்கு, நாளடைவில் அவள் அழகே அலாவுதீனின் படையெடுப்பிற்குக் காரணமாக இருந்து, நாட்டையே பறிகொடுத்து, மாய்ந்து மறைவதற்குத் துணையாக நின்றது போல, ஆறு, ஏழு ஆண்டுகட்குமுன், யுத்தத்தின் காரணமாக பொருள்கள் தட்டுப்பாட்டிற்குள்ளானதால், கிடைப்பதை எல்லோரும் சமமாகப் பங்கிட்டு உண்ணவேண்டுமென்ற உன்னத நோக்கத்துடன் மக்களின் நன்மைக்கென்றே ஏற்படுத்தப்பட்ட கண்ட்ரோல்களெல்லாம், நாளடைவில் நாட்டுமக்களுக்கு, ஏழை, எளியவர்களுக்கு கணக்கிலடங்கா இன்னல்களை விளைவித்துள்ளது. இதற்குக் காரணமும், காரணஸ்தர்களும் ஒருசிலர்தான்.

குறிப்பாகக் கூறுமிடத்து, 'உடன்பிறந்தே கொல்லும் வியாதி' என்றபடி, ரேஷன், கண்ட்ரோல்களுடன் பிறந்த உத்தியோகஸ்தர்களும், நாட்டு மக்களின் நன்மையை மதிக்காது, கொள்ளை லாபத்தையே பெரிதென மதித்த, விரல்விட்டு எண்ணக்கூடிய மனித இதயம் படையா சில பணக்காரர்களும்தான். உத்தியோகஸ்தர்கள்செய்த ஆர்ப்பாட்டங்களும், அட்டகாசங்களும் சொல்லிமுடியாது. பெர்மிட்டிற்கும், பிறவற்றிற்கும் வரும் பெரிய மனிதர்களின் கைப்பாவையாக திகழ்ந்தனர் இவர்களில் அநேகர்.

அரசினர் அலுவலகத்தினரிடமும், மக்களிடையேயும், லஞ்சமும், ஊழலும் தலைவிரித்தாட தக்க வாய்ப்பளித்த கண்ட்ரோல்கள் பலவற்றுள், முன்னணியில் நின்றது உணவுக் கண்ட்ரோல் ஆகும். 'யானை போவது கண்ணில்படாது. ஆனல், பூனை போவதைத் துரத்திப் பிடித்துத் தொந்தரவு கொடுப்பதில் நிபுணர்கள்' என்று கூறும்படி, உணவு ரேஷன் அதிகாரிகளும், சிப்பந்திகளும், மூட்டை மூட்டையாகக் கடத்தப்படுபவைகளை விட்டுவிட்டு, அன்றாட வயிற்றுப் பிழைப்பிற்காக தலைச்சுமையாகக் கொண்டுசென்று விற்றுப் பிழைப்பவர்களிடம் நடத்திய தடபுடல்கள் சொல்லி முடியாது. இந்தக் கண்றாவி, இரயிலில் அடிக்கடி பிரயாணம் செய்பவர்களுக்கு நன்கு தெரியும். சாண் வயிற்றிற்காக மானம், மரியாதை இழக்கநேரிட்ட மக்களின்—மங்கையரின்—கூட்டம் கணக்கிலடங்கா. அவர்கள் வடித்த கண்ணீர் ஒருநாளும் வீண்போகாது.

உணவுப் பொருள்கள் கொள்முதல், விலை, விநியோகக் கட்டுப்பாடுகள் இருந்த போதிலும், ஏராளமாக கள்ளச் சந்தையில் விற்பனையாகிக்கொண்டு வந்தன என்றால் இந்த ஊழலுக்கு யார் பொறுப்பு? கண்ட்ரோல்களைச் சற்றுத் தளர்த்த நினைத்தபோது, அதனால் நன்மையடைந்துவந்த சிறுபகுதியினர், அரசாங்க யந்திரத்தைச் சுழற்றிவந்த சுயநலமிகள், தப்பும் தண்டாவுமாக கணக்கைக் காட்டி, கண்ட்ரோலை நீக்கினால் நாடும், நாட்டு மக்களும் அப்படியே கூண்டோடு கைலாசம் போய்விடுவார்கள் என்று கையைப் பிசைந்து, நீலிக்கண்ணீர் வடித்து கண்ட்ரோலை நீடிக்கவைத்து வந்தனர்.

m21,N49 31J2

தப்பி ஓடுவதற்கு வழியின்றி எக்கசக்கமாக மாட்டிக்கொண்டால், பூனையும் புலியாகச் சீறும் என்றபடி, இன்று சென்னை ராஜ்யத்தின் நிலைமை மாறிவிட்டது. இதுநாள்வரை மத்திய சர்க்கார், உள்நாட்டில் கொள்முதல் செய்யப்படும் தானியத்திற்கும், அயல்நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் தானியத்திற்கும் இடையேயுள்ள வித்தியாசத்தைச் சரிக்கட்டுவதற்காக, மாகாண சர்க்காருக்குக் கொடுத்துவந்த உணவு மான்யத்தை நிறுத்திக்கொண்டனர். கண்ட்ரோல் நீடித்தால், இந்த நஷ்டத்தை ஈடுசெய்ய வேண்டிய பெரும் பொறுப்பு மாகாண சர்க்காரைச் சேர்ந்ததாகும். இத்துடன் சமீபத்தில் நிகழ்ந்த விலைவீழ்ச்சி காரணமாக, ஆங்காங்கே உள்ள ரேஷன் மொத்த வியாபாரிகள், பணமுடையால், ஏராளமான ரூபாய்களை முன்போல் முதலீடு செய்து, ரேஷன் சரக்குகளில் முடக்க முன்வரவில்லை என்பதுவும் ஒரு காரணம். எற்கனவே உள்ள பொருளாதார நெருக்கடிக்குள் இவற்றைவேறு இழுத்துப் போட்டுக்கொண்டு உழல்வதைவிட, உணவுப்பொருள்கள் மீதுள்ள கொள்முதல், விலைவிநியோகக் கண்ட்ரோல்களைப் பூராவும் உடனடியாக நீக்கிப் பார்ப்பது என்ற துணிவுக்கு வந்துவிட்டனர் சென்னை அரசினர்.

எனவே ராஜ்யத்தில், உபரிஉள்ள ஜில்லாக்களுடன், ஒட்டியுள்ள குறைவுபடி ஜில்லாக்களைச் சேர்த்து, அதாவது (1) கிழக்குக் கோதாவரி, விசாகபட்டினம், ஸ்ரீகாகுளம்; (2) மேற்குக் கோதாவரி, கிருஷ்ணா, நெல்லூர், சென்னை, செங்கல்பட்டு, சித்தூர், வட ஆற்காடு; (3) குண்டூர், அனந்தப்பூர், பெல்லாரி, கடப்பை, கர்நூல்; (4) தஞ்சாவூர், தென் ஆற்காடு, திருச்சி, ராமநாதபுரம், மதுரை, கோயமுத்தூர், சேலம், திருநெல்வேலி; (5) தென் கன்னடம்; (6) மலபார், நீலகிரி.

இப்படி 6 மண்டலங்களாகப் பிரித்து, கட்டுப்பாடுகள் பூராவையும் நீக்கி, அடுத்த மண்டலத்திலிருந்து கொண்டுவரவும், செல்லவும் பர்மிட் வைத்து, உடனடியாக அமுலுக்குக்கொண்டுவந்துள்ளனர். ரேஷன் கடைகளெல்லாம் ஜூன் 15உ முதல் நியாயவிலைக் கடைகளாக, 7 அவுன்ஸ் அரிசிவீதம் இப்பொழுதுள்ள ரேஷன் கார்டுகளுக்கு விநியோகம் செய்யும். எட்டு மாதங்களுக்கு வேண்டிய உணவுப் பொருளை கைவசம் வைத்துக்கொண்டே இம்முறையில்இறங்கியிருக்கும் இக்கொள்கை

பொதுப்படையாக மக்களால் வரவேற்கப்படும்என்பதில் சந்தேகமில்லை. மக்களும், வர்த்தகர்களும் நன்கு ஒத்துழைத்தால் வெற்றி பெறுவது திண்ணம் என்று அரசினரும், பல பத்திரிகைகளும் கூறுகின்றனர். ஆனால் நாம் கூறுவது, அரசினரும் ஒத்துழைக்கவேண்டும் என்பதுதான்.

ராஜ்யத்திற்குள் நன்செய், புன்செய் தானியங்கள் நடமாட்டத் திற்கு எட்டளவில் திறந்துவிட்டால்மட்டும் போதாது. காரியாமசமா சில தேவைகளை வர்த்தகர்களுக்கு உதவவேண்டும். நெல், சோளம், கம்பு முதலிய உணவுப்பொருள்களின் குறைவைச் சிறிது சரிக்கட்டி ஆறுதல் அளித்துவந்தது நவதானியங்களாகும். அந்நாள்தொட்டு இந் நாள்வரை நம் தமிழ்நாட்டிற்குத் தேவையான கடலை, உளுந்து, துவரை, பட்டாணி, தட்டைப் பயிறு, பாசிப்பயிறு, மொச்சை போன்றவை உத் தரப்பிரதேசம், ஹைதராபாத், மத்திய பிரதேசம், பஞ்சாப் முதலிய ராஜ்யங்களிலிருந்துதான் வரவேண்டியதிருக்கின்றன.

விருதுநகர் வியாபாரிகள் அநேகருக்கு மேற்கண்ட ராஜ்யங்களில் சுமார் இரண்டு மாதங்களுக்குமுன்பே வாங்கப்பட்ட ஏராளமான தானி யங்கள் வாகன் சப்ளை இல்லாமையால், ஆங்காங்கே மழைக்கும், வெயி லுக்கும் கிடந்து நாசமாகிக்கொண்டிருக்கின்றன இதனால் விலையும் நஷ்டத்தையும், சேதாரத்தையும் சற்று எண்ணிப்பார்க்க வேண்டும். இதைப்போல் எத்தனையோ ஊர்க்காரர்கள் தவிக்கின்றனர். புக்கிங் வேறு தடைசெய்யப்படுகிறது சென்னைக்கு. ஆனால் பம்பாய்க்கு புக்கிங் தகராறில்லை. அங்கு கொண்டுசென்று, பின் கப்பல்மூலம் கொச்சி, தூத்துக்குடி துறைமுகங்களுக்குக் கொண்டுவந்து, ஊர் சேர்ப்பதானால் அதனால் வரும் செலவு, மூடைக்கு ரூ. 10, 12 ஆகி, பின் அது பூராவும் தானிய விலையில் அதிகப்படுத்தி, நஷ்டத்தைத் தவிர்க்கவேண்டி வருகி றது வியாபாரிகளுக்கு. இதனால் பாதிக்கப்படுகிறவர்கள் பெரும்பாலும் இவற்றை வாங்கும் ஏழைகள்தான். எனவே சென்னை சர்க்கார், தங்கள் உணவுக் கொள்கையில் வெற்றியடைய வேண்டுமானால், தாராளமான புக்கிங்கிற்கும், வாகன் வசதிக்கும் உடனே ஏற்பாடு செய்துகொடுக்க வேண்டும் வர்த்தகர்களுக்கு. மேலும் உள்நாட்டில் உபரியுள்ள இடங் களிலிருந்து தட்டுப்பாடான இடங்களுக்கு உணவுப் பொருள்களைக் கொண்டுசெல்ல முதல் சலுகை ரயில்வேக்களில் கொடுக்கப்படவேண் டும், புக்கிங், வாகன் வகைகளில் லஞ்சம் தாண்டவமாடாத முறையில்.

இத்துடன் விற்பனைவரி சம்பந்தமாகவும், வரிகட்டுவோர் மன வேதனைக்குள்ளாகாது, மனமகிழ்ச்சியுடன் நம்நாடு நலம்பெறவே நாம் வரிகட்டுகிறோம் என்ற பரிசுத்த மனதுடன் ஒளிவு மறைவின்றி கணக் கைச் செவ்வனே கொண்டுவந்து காண்பித்து வரிகட்டும் நிலைமையில், சிறிது மாறுதல் செய்யவேண்டும். நாட்டில் வியாபாரமும், தொழிலும் செழித்தோங்கினால்தான் அரசாங்கமும் அமைதியாக அரசு செலுத்த முடியும்.

நான்காம் ஆண்டு!

'மகிழ்ச்சி' நேயர்களின் பெரு ஆதிப்பிற்கிடையே தனது நான்காம் ஆண்டின் முதற்படியில் ஏறி விட்டது என்பதைக் கூற மிக்க மகிழ்ச்சியடைகிறோம். வாழ்த்துக்கள் அனுப்பிய அன்பர்களுக்கு நமது நன்றி.

நமது 'மகிழ்ச்சி' இதுநாள் வரை நம்சமூகத்தில், புரையோடித் துர்நாற்றம் வீசும் ஜாதி, சமயம், ஏற்றதாழ்வுபோன்றவைகளையும், அரசியலில் நடக்கும் பித்தலாட்டங்களையும் சீர்திருத்த கதை, கட்டுரை, கவிதைகள் மூலம் வெட்டவெளிச்சமாக்கி வந்ததுபோல் இனியும்தொடர்ந்து பணியாற்றும்.

எப்பத்திரிகையிலும் காணாத இரு புதுமை!

இதுவரைதமிழ்நாட்டில்வெளிவந்த,வரும் எப்பத்திரிகையிலும் காணாதவகையில் நமது மகிழ்ச்சியில் தமிழர் மறையாகிய திருக்குறளை வரிசையாக ஒவ்வொரு பக்கத்தின் அடியிலும் தொடர்வாகப் பதித்துவந்தோம். 1330 குறள்களும் இந்த இதழுடன் முடிவாகிறது என்பதைக் கூற பெருமையடைகிறோம்.

மற்றொன்று நமது மகிழ்ச்சியில் வெளிவரும் பகுதிகள் எதிலும் (கதையில்கூட) ஜாதிப் பெயர்களைச் சேர்ப்பதில்லை. இன்று நாட்டிலே ஜாதி சமயங்களால்தான் பெரும் தொல்லைகளும், கொள்ளைகளும், கொலைகளும் நிகழ்கின்றன. ஜாதிப் பாகுபாடுகளை சட்டப்பூர்வமாகதடுக்க வேண்டுமென்று பலமுறை நாம் எழுதி இருக்கிறோம். முன் மாதிரியாகச்செல்லும் உத்தேசத்துடன் நமது மகிழ்ச்சியில் ஜாதியைக் குறிக்கும் சொற்களை அறவே ஒழித்து வந்துள்ளோம்.

மகிழ்ச்சிக்கு கதை, கட்டுரை எழுதும் எழுத்தாளர்கள் இப்பொழுது இதை நன்கு கடைப்பிடிக்கிறார்கள். அந்தவகையில் மகிழ்ச்சிக்கு வெற்றி என்றாலும் இதேபோல் எழுத்தாளர்கள் அனைவரும், எந்தப் பத்திரிகைக்கு எழுதினாலும் இம்முறையையே மேற்கொள்ள பணிவுடன் வேண்டுகிறோம்.

பிறர், பத்திரிகைத் துறையில் நுழையுமுன் புகுந்த காரணத்தாலும்,காலப்போக்காலும்,செல்வாக்குடன் நடைபெற்றுவரும் பிற்போக்குக் கும்பல்களின் இதழ்களை வென்று தமிழரின் கலை, நாகரீகம், பண்பு முதலியவைகளைத் தழைத்தோங்கச்செய்யவேண்டுமானால், நமது இதழ் போன்ற கருத்திதழ்களை, முன்னேற்றம், சீர்திருத்தம் விரும்பும்

முன் அட்டைப்படம்:
வடநாட்டு பிரபல சினிமா நக்ஷத்திரங்கள் ராஜ்கபூர் & நர்க்கீஸ்

ஒவ்வொருவரும், குறிப்பாக இளைஞர்கள், தீவிரமாக ஆதரிக்க வேண்டும். சிகரெட்டிலும் சினிமாவிலும் செய்யும் செலவின் ஒரு பகுதியை, பத்திரிகைகளின் ஆண்டுச் சந்தாக்களாகக் கட்டி, வாங்கிப் படித்து பத்திரிகைகளை ஊக்குவிக்கவேண்டும். ஊரிலுள்ள வாசகசாலைகளுக்குச் சந்தாக்கட்டித் தருவித்து பலருக்கு உதவலாம். இதை ஒவ்வொருநேயரும் கடைப்பிடிக்க வேண்டுகிறோம்.

அன்பர்கள் ஆணை!

மகிழ்ச்சி அன்பர்களின் வேண்டுகோளுக்கிணங்க, சிலபகுதிகள் இவ்இதழில் புதிதாகத் துடங்கப் பெற்றிருக்கிறது. உலகத்துமக்களுக்கு வழிகாட்டிய சில அமெரிக்க அறிஞர்கள் குறித்து, சுருக்கமாக திரு. V. V. R. T. ராஜன் B. A. அவர்கள் தொடர்வாக நம் மகிழ்ச்சியில் எழுதிவர ஒப்புக்கொண்டுள்ளதை, இளைஞர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம். மற்றும் நேயர்கள் விரும்பிய பலபகுதிகளையும், புதியபுதியகருத்துக்களையும், வரும் இதழ்களில் புகுத்த முயற்சிக்கிறோம். நேயர்களும் தங்கள் கருத்தில் எழும் அபிப்பிராயங்களை தாராளமாகஎழுதி அனுப்ப வேண்டுகிறோம்.

மகிழ்ச்சியின் வளர்ச்சியில் பங்குகொண்ட மகிழ்ச்சி விற்பனையாளர்களுக்கும், விளம்பரம் கொடுத்துதவுபவர்களுக்கும் வாசக நேயர்களுக்கும் நமது நன்றியை மனமகிழ்ச்சியுடன்தெரிவித்துக்கொள்கிறோம். —ஆசிரியர்.

மகிழ்ச்சி ஆண்டுச் சந்தா (தபாலில்) ரூ. 2–4–0
மகிழ்ச்சி இல்லம், விருதுநகர்.

இலங்கை பூராவிற்கும்

மகிழ்ச்சியின் சோல் ஏஜண்டாக நாங்கள் ஏற்றிருக்கிறபடியால் இலங்கையில் சப் ஏஜன்ஸி எடுக்க விரும்புவோர் எங்களுக்கு எழுத வேண்டுகிறோம்.

த. தம்பித்துரை, நியூஸ் ஏஜண்ட்,
நெ. 226, ஆஸ்பத்திரி ரோடு,
யாழ்ப்பாணம். (சிலோன்)

தெரிந்துகொள்ளுங்கள்

சமீபத்தில் இலங்கையில் நடைபெற்ற தேர்தல் முடிவுகள்:

மொத்த ஸ்தானங்கள் 101. இதில் கவர்னர்ஜெனரல் நியமன ஸ்தானங்கள் 5. மீதியுள்ள 95க்கு தேர்தல் முடிவு விபரம்.

ஐக்கிய தேசியக் கட்சி	54
சுயேட்சை	11
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி	9
நவலங்கா சமசமாஜக் கட்சி	9
தமிழ் காங்கிரஸ்	4
கம்யூனிஸ்ட்	4
தமிழரசுக் கட்சி	2
தொழிற்கட்சி	1
குடியரசுக் கட்சி	1
மொத்தம்	95

இந்திய மக்கள் நிலவரம்

இந்தியா சென்ஸஸ் கமிஷனரும் ரிஜிஸ்டிரார் ஜெனரலுமான திரு. ஆர்.ஏ.கோபால்சாமி அறிவிக்கிறார்: இந்தியாவின் ஜனத்தொகை சென்ஸஸ் 1951ல் 35,68,29485 (36கோடி). சென்ற 10 வருடத்தில் 12½% அதிகம்.

பஞ்சாபில் ½% குறைவு. அந்தமான் தீவுகள் 8½% குறைவு. மற்ற இடங்களில் 10 அல்லது 11% அதிகம். தென் இந்தியாவில் 15¼% அதிகம். குடகில் மட்டும் 30% அதிகம். விவசாயத்தையே ஜீவனமாகக் கொண்டவர்கள் சுமார் 25 கோடி. மொத்த ஜனத்தொகையில் ஆண்கள் மட்டும் ஏறக்குறைய 18½ கோடி. பெண்கள் 17 கோடி. ஒவ்வொரு 1000 ஆணுக்கும் 947 பெண்.

தென் இந்திய ஜனத்தொகை 7,56,00,804. சென்னை ராஜ்யத்தில் 1000 ஆண்களுக்கு 1006 பெண்கள். திருவாங்கூரில் 1008 பெண்கள். இந்திய ஜனத்தொகையில் 82¾% கிராமவாசிகள். விவசாயிகளில் சொந்த நிலமுள்ள குடும்பத்திலுள்ளவர்கள் 17 கோடி. பூரண சொத்துரிமையில்லாதோர் 3 கோடி. சொத்துக்களே இல்லாது விவசாய வேலை பார்ப்போர் சுமார் 5 கோடி. சொத்துரிமைமட்டும் உள்ளவர்கள் 50 லக்ஷம்.

1950, 51ல் சென்னையில் சென்ஸாராகி வெளிவந்த படங்கள்

	1950	1951
தமிழ்	20	25
தெலுங்கு	19	20
மலையாளம்	6	7
கன்னடம்	3	2
ஹிந்தி	2	4
மொத்தம்	50	58

தமாஷா வரி

1949–1950	ரூ. 4,02,286
1950–1951	ரூ. 6,38,540

இது நிஜமா?

[வாகன்]

காதல்

காதலை வளர்க்கிற முத்தம் வியாதியைப் பரப்புகிறதே!

—ஒரு சுகாதார அதிகாரி

காமம்

காதலையும் இருமலையும் எவ்வளவுதான் மறைக்க முயன்றாலும் முற்றிவிட்டால் முன்னது காமமாகவும், பின்னது க்ஷயமாகவும் மாறிவிடும்; அப்போது உயிரை வாங்கிக்கொண்டுதான் இருக்கும்—உறங்கக்கூடவிடாது.

—ஒரு T. B. ஸ்பெஷலிஸ்ட்

கற்பு

கற்பு—ஒளிபோல. கண்கள் ஒளி இழக்கும்போது தலைகவிழ்ந்துபோகிறது. கற்பிழக்கும்போது தலைநிமிர்ந்து நடக்க முடியுமா?

—ஒரு கண் டாக்டர்

கலியாணம்

'பல் போனால் சொல் போச்சு' ஊவை உளறவிடாது தடுக்கக் கோட்டைகள்போல் பல்வரிசைகள் அமைந்திருக்கின்றன. காதலின் வேகத்தைத் தடுத்து நிதானப்படுத்தவே கலியாணம் ஏற்பட்டது.

—ஒரு பல் டாக்டர்

அனுபவம்

கலியாணத்திற்குமுன் காதல் என்பது ஆபரேஷனுக்குமுன் குளோரோபாரம்—பிறகு விழிப்பு ஏற்படுகிறது.

—ஒரு கம்பவுண்டர்

உலகம்

ஆணுக்கு உலகமெல்லாம் வீடு. பெண்ணிற்கு வீடுதான் உலகம். கோயிலிற்கு வெளியே வந்து விழுந்துவிட்டால் தெய்வம் கல்லாகிவிடும்.

—ஒரு பிரசங்கி

நீங்கள் படித்தீர்களா?

மகிழ்ச்சி ஆசிரியர்

நா. சதானந்தம் எழுதிய

"15 நிமிடங்கள்"

விலை அணா 4

கண்ணீர்த் துளிகள்!

[ஏ. வி. பி. ஆசைத்தம்பி]

"மகிழ்ச்சி" பத்திரிகை வெளி வந்தவுடனே, நீங்களெல்லாம் மகிழ்ச்சியாக அதைப் படிப்பீர்கள்; படித்தவிஷயத்தை எண்ணி எண்ணி ரசிப்பீர்கள்.

ஆனல், என்னை மகிழவிடுவதில்லை, அதன் ஆசிரியர் நண்பர் சதானந்தம். "என்ன ஆசைத் தம்பி! அடுத்த மகிழ்ச்சிக்குக் கதையை எங்கே? சீக்கிரம் எழுதிக்கொடு! பத்திரிகைவெளிவந்து பத்துநாளாகிவிட்டதே. அச்சுவேலையை ஆரம்பிக்க உன் அடுத்த கதையைக்கொடு!" இப்படியே என்னைத் தினமும் தார்க்குச்சியால்குத்துவதுபோல் வார்த்தைகளால் வருத்திக்கொண்டே இருப்பார்! இந்த நிலையிலே உங்களைப்போல் நான் மகிழ்ச்சி படைய முடியுமா?

என்ன கருத்துடன் கதை எழுதுவது? கற்பனையாகஎழுதுவதா? கண்கண்ட காட்சிகளைத் தழுவி எழுதுவதா? அது சிறு கதையாக அமையுமா? கதையை எப்படிஆரம்பிப்பது? முடிப்பது எப்படி? இப்படியே கேள்விகள் நீண்டுகொண்டே இருக்கும், அறுந்துபோகும்ரப்பரைப்போல அல்ல, இலங்கையைக் கொளுத்தியாகச் சொல்லப்படும் அனுமாரின் வாலைப்போல.

இவ்வளவு சிரமம் பிடித்த வேலையை யார்தான் செய்யமுடியும்? கசாப்புக் கடைக்காரனுகிவிட்டால் கத்தியைத் தீட்ட வேண்டும், ஆட்டைப் பிடிக்க வேண்டும், கழுத்திலே கத்தியை வைக்கவேண்டும், அது 'அம்மா, அம்மா' என்று அலறிஞலும் அலட்சியம் செய்துவிட்டு, அதனை அறுத்து, தோலை உறித்து, விலையாக்கத்தானே வேண்டும்! கஷ்டத்தையோ, கருணையையோ பார்த்தால் முடியுமா? அதைப் போலதான் எழுத்தாளனுகஇருந்தால், எதையாவது எழுதத்தான் வேண்டியதிருக்கிறது.

இந்த மாதமும் நண்பர் சதானந்தம் தனது பல்லவியை என்னிடம் பாட ஆரம்பித்தார். ஆச்சாரியாரின் பஜகோவிந்தம் பாட்டைக்கேட்டு வருணபகவானே மழையைப்பொழியும்போது ஆசிரியரின் பல்லவியைக்கேட்ட பின்பும் நான் மரக்கட்டையாக இருக்கலாமா?

"மிஸ்டர் சதா! இன்று தென்

காசிக்கு பொதுக்கூட்டத்திற்குப் போகிறேன். வந்ததும் கதையை தருகிறேன்'' என்று சொல்லி விட்டு, அவசர அவசரமாக ரயிலுக்கு வந்தேன், தென்காசி செல்லும் திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸைப் பிடிக்க.

ரயில்வேஸ்டேஷனுக்கு நான் வரும்போது காலை மணி 9 ஆகிவிட்டது பிளாட்பாரத்தில் வண்டியில்லை; போய்விட்டதோ என்ற எண்ணத்தில் போர்ட்டரைக் கூப்பிட்டுத் "திருவனந்தபுரம்......''என்று நீட்டினேன்.

"இன்னும் போகலீங்க! 30 நிமிஷம் லேட்'' என்று கரைக்டாகச் சொன்னான் போர்ட்டர். எனக்கு ஓரே மகிழ்ச்சி!

இந்தியன் பங்ச்ஜீவாலிட்டியை இப்போது இரயில்வேக்காரர்களும்கடைப்பிடித்துவிட்டார்கள்! இந்த இந்தியன் பங்க்ஜீவாலிட்டி எனக்கு இரயில் கிடைக்கும்படியான மகத்தான நன்மையைச் செய்துவிட்டது! இதை நினைக்கும்போது எனக்கு இரட்டை மகிழ்ச்சி!

இரயிலில்ஏறி உட்கார்ந்தேன். எனக்கு எதிரே ஒரு இளந் தம்பதிகள் உட்கார்ந்திருந்தார்கள். அவர்களை முதலில் பார்த்தவுடனே, இவர்களைஎங்கேயோபார்த்திருக்கிறோமே என்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டது. என் சந்தேகத்தைத் தீர்த்துக்கொள்ள மீண்டும் ஒருமுறை அந்தத் தம்பதிகளைப் பார்த்தேன். எனக்கு ஓரே வியப்பு.

எதிரே இருப்பது லலிதாவா? லைலாவின் தங்கையா? ஒரு வருடத்தில் ஆளே அடையாளம் தெரியாதபடி மெலிந்துவிட்டாளே?—என் கண்ணோட்டம் இப்படிமட்டுமல்ல, லலிதாவின் வாழ்க்கையை ஏன் கதையாக எழுதக்கூடாதுஎன்றுகூட சுழல ஆரமபித்தது.

லைலாவும், லலிதாவும் அக்காளும் தங்கையுமாக பிறந்தவர்கள். சிறுவயதிலேயே தாய்தந்தையை இழந்தவர்கள். அக்காளைவிட தங்கை எல்லாவகையிலும் சிறந்தவள். லலிதாவின் அக்காளின் பெயர்தான் லைலா; ஆனால் குணத்திலும், ஒழுக்கத்திலும் அவள் லைலா அல்ல, டிலைலா!

பாரசீக இலக்கியத்திலே வருகிறலைலா, ஒழுக்கமானவள், உததமமானவள். கயஸ் என்ற வாலிபனுக்காகக் காலமெல்லாம் கண்ணீர்விட்டுவாழ்ந்து, அவனுக்காகவே மடிந்தவள். ஆனால் டிலைலா அப்படியல்ல, சாகசம் நிறைந்த சதிகாரி! காதல் மொழி பேசி சேம்சனைக் காட்டிக்கொடுத்த கள்ளி! பலரிடத்திலும் பல்லிளித்த பாசாங்குக்காரி!

லலிதாவின்அக்காள் லைலாவும் அப்படிப்பட்டவளாகத்தானிருந்தாள். கட்டிய கணவன் இருந்

தனியே இருந்து நினைத்தக்கால் என்னைத்
தினிய இருந்த(து)என் நெஞ்சு. 1296

தும் இன்னொருவனை நேசித்தாள். அவனை "அன்பே! ஆருயிரே! சுகுமாரா! இதயராஜா!" இப்படி என்னென்ன வார்த்தைகள் இருக்குமோ அவைகளை எல்லாம் உபயோகித்து மயக்கினாள்; காதல் கடிதங்கள் எழுதினாள். அவனும் அவளே உயிர் என்று இருந்தான்.

ஆனால் கணேசன் என்ற இன்னொரு கள்ளக் காதலனைப் பிடித்தாள் அந்தக்கள்ளி. பழைய காதலனைக் காட்டிக்கொடுத்து ஊராரிடம் உதைவாங்கிக்கொடுத்தாள். அவமானம் தாங்காது அவன் உயிரைவிட்டான். சனியன் தொலைந்தது என்று கருதி சந்தோஷமாகவாழ்ந்தாள் லீலா.

ஆனால், லலிதா அக்காளைப் போல 'லம்பாடி' அல்ல. கணவன் இருக்க இன்னொருவனோடு தொடர்புகொண்டுஇருக்கவில்லை.

பருவத்திலே லலிதா ஒருவனைக் காதலித்தாள். உயிராகக் காதலித்தாள். அவன் என் நண்பன். பெயர் வைத்தியநாதன். இருவரும் ஒருவரை ஒருவர் உண்மையாகக் காதலித்தனர். ஆனால் கல்யாணத்திற்கு லலிதாவின் சித்தப்பா அனுமதிக்கவில்லை. வண்டியிலே பூட்டப்பட்ட குதிரைக்குஇழுக்க மனம்இல்லாவிட்டால் "முடியாது" என்று வாய்விட்டுச்சொல்லமுடியுமா? நகராதபடி இடக்குச் செய்யலாம். அப்படித்தான் செய்துபார்த்தாள் லலிதா. ஆனால் குதிரைக்காரன் சவுக்கால் அடித்து குதிரையை விரட்டுகிறானல்லவா? அதைப் போலதான் லலிதாவின் கழுத்திலே பலவந்தமாக தாலி கட்டப்பட்டது. மாப்பிள்ளைபோடு திருச்சிக்குச் சென்றாள் லலிதா.

என் சிந்தனை கலைய ஆரம்பித்தது. அதற்குக் காரணம் இரயில் ஓட ஆரம்பித்தது. எதிர் லைனில் நின்ற திருநெல்வேலி எக்ஸ்பிரஸும் புறப்பட்டது. இரண்டு எக்ஸ்பிரஸும் ஒரே திசையில் போட்டிபோட்டு ஓட ஆரம்பித்தன. இரண்டும் ஒரே வேகத்தில் ஒன்றையொன்று முந்தாதபடி சென்றன.

இப்படித்தான் லலிதாவும் வைத்தியநாதனும் காதல்பாதையில் முன்னேறிச் சென்றனர். ஆனால் ஒருமைல் ஓடியதற்குப் பின் சேர்ந்துசென்றதிருவனந்தபுரம் எக்ஸ்பிரஸும், திருநெல்வேலிஎக்ஸ்பிரஸும் வெவ்வேறு திசையில் ஓடி மறைந்தன.

காதல் பாதையும் இப்படிப்பட்டதாகத்தான் இருக்கவேண்டும். இல்லாவிட்டால் லலிதாவும் வைத்தியநாதனும்பிரிந்திருப்பார்களா? இன்று வைத்தியநாதனை எங்கே? ஆளையே காணோம். லலிதாவின் கல்யாணத்திற்குப் பின் அவனைக் காணோம். ஒரு வருடமாக அவனைக் காணோம். உயிரோடு இருக்கிறானா, செத்து

நாணு மறந்தேன் அவர்மறக் கல்லாஎன்
மாணு மடநெஞ்சிற் பட்டு. 1297

விட்டானுளன்பதேதெரியவில்லே.

லலிதா ரொம்பவும் மெலிந்திருந்தாள். அவள்தான் என்ன செய்வாள்? கழுத்திலே தாலியைக் கட்டிவிட்டால் கருத்திலே இருக்கிற எண்ணத்தை—காதலே—வெட்டிவிடமுடியுமா? காதல் ஏக்கத்தால்தான் லலிதா மெலிந்திருக்க வேண்டும்; வைத்தியநாதன் ஒழிந்தேபோய் இருக்க வேண்டும்.

இரயில் சிவகாசியிலே வந்து நின்றது. டிக்கெட் பரிசோதகர் வண்டியில் வந்து ஏறினர். அவரிடம் லலிதாவின் கணவன் "என்சார் குற்ருலத்தில் சீசன் எப்படி இருக்கிறது?" என்று கேட்டான். அதிலிருந்து லலிதா குற்ருலம் போகிருள் என்பதை அறிந்தேன்.

லலிதாவின் கதையை எப்படி முடிப்பது? இந்த யோசனையில் மூழ்கினேன் ஆனல் தென்காசி த்தான் வந்ததேதவிர, என்கதைக்கு ஒரு முடிவு வரவில்லே.

அன்று இரவு தென்காசியிலே பொதுக்கூட்டம் சிறந்த முறையில் நடந்தது. தென்காசி வந்தும் குற்ருலம் போய்த் திரும்பாமல் இருக்கலாமா? கூட்டம் முடிந்ததும் நான் காரிலேயே குற்ருலம் புறப்பட்டேன்.

மறுநாள் காலே 8 மணி இருக்கும், நானும் அருவிக்கு குளிக்கச் சென்றேன். அங்கே கூட்டத்தினிடையே லலிதாவும் அவள் கணவனும் குளித்துக் கொண்டிருப்பதைக் கண்டேன்.

கதையை எப்படி முடிப்பது என்று மீண்டும் எனக்கு யோசனை ஆரம்பித்தது. அருவியிலே தண்ணீர் வீழ்ந்து, சிதறி ஓடுவதுபோல, என் எண்ணங்கள் ஓடின. எதுவுமேபயன்படவில்லே.

நானும் தலேக்கு எண்ணெயை தேய்த்துவிட்டு, பல்லே விளக்கிவிட்டு குளிக்கப் புறப்பட்டேன். அப்போது ஒரு விசில் சப்தம் கேட்டது. நான்மட்டுமல்ல, மற்ற ஜனங்களும்திரும்பிப்பார்த்தனர்.

இருபது பேருக்குக் குறையாமல் வரிசையாக ஒரு கூட்டம் வந்துகொண்டிருந்தது. காக்கிச் சட்டை போட்டவர்கள் அந்தக் கூட்டத்தை நடத்திவந்தார்கள். "இவர்களெல்லாம் யார்?" என்று பக்கத்திலே நின்றவரைக் கேட்டேன். "பைத்தியக்காரர்கள்" என்று பதிலளித்தார் அவர்.

பைத்தியக்காரர்களேப் பார்ப்பதிலே ஜனங்களுக்கு ஒரு பைத்தியம் உண்டு. நானும் அந்தக் கூட்டத்தைப் பார்த்தேன். எனக்கு ஒரே ஆச்சரியம். என்னல் என்னேயவே நம்பமுடியவில்லே. அந்தப் பைத்தியங்கள் கூட்டத்திலே என் நண்பன் வைத்தியநாதனும் இருந்தான்.

நான் லலிதாவைத் திரும்பிப்

எள்ளின் இளிவாம்என் றெண்ணி அவர்திறம்
உள்ளும் உயிர்க்காதல் நெஞ்சு. 1298

அமெரிக்க அறிஞர்கள் வரிசை 1

அமெரிக்காவின் தந்தை

ஜார்ஜ் வாஷிங்டன் 1732-1799

[R. T. ராஜன், B. A.,]

'வெர்னன்' முடியைத் தரிசிக்காத அமெரிக்கன் இருப்பது மிகவும் அபூர்வம். வெளிநாடுகளிலிருந்து வரும் பிரயாணிகள் யாவரும் அவசியம் 'வெர்னன்' முடியைத் தரிசித்த பின்னரே ஊர் திரும்புவர். ஏன்? அது, அமெரிக்க குடியரசுஸ்தாபகரும் அமெரிக்காவின் தந்தையெனப் போற்றப்படுபவருமான ஜார்ஜ் வாஷிங்டன் பிறந்த இடமாகும். அந்த இடம் அமெரிக்கத் தலைநகரானவாஷிங்டனிலிருந்து சில மைல் துலைவில் 'பொடோமாக' நதியை எதிர்நோக்கியிருக்கிறது.

ஜார்ஜ்வாஷிங்டன் தன் இளம் பருவத்தை தன் தந்தையின் பெரிய புகையிலைத்தோட்டத்தில் கழித்தார். அது வர்ஜீனியா எனும் பிரிட்டிஷ்காலனியிலிருந்தது. தம் பதினாறும் பிராயத்தில் நிலங்களை அளந்து சரிபார்க்கும் சர்வேயரானார். அவரின் காலனிக்கும், அடுத்து உள்நாட்டிலிருந்த பிரெஞ்சுப் பிரதேசத்திற்குமிடையேயுள்ள கரடுமுரடான பிரதேசங்களை ஆராய்ந்து சர்வே செய்தார்.

பிரிட்டிஷாருக்கும் பிரெஞ்சுக்காரருக்குமிடையே போர்மூண்டது. 21 வயதான வாஷிங்டன் வர்ஜீனியாவின் படைத்தலைவனாக நியமிக்கப்பட்டார். பிரிட்டிஷ் துருப்புகளுக்கு வாஷிங்டன் காடுமேடுகளிலெல்லாம் மிகவும் ஒத்தாசை புரிந்தார். பிரிட்டிஷ் பட்டாளம் ஒன்று எதிரிகளால் சுற்றி வளைத்துக்கொள்ளப்பட்டு அதன் தளபதியும் கொல்லப்பட்டான். உடனே வாஷிங்ட்ன் தளபதியாக்கப்பட்டு பிரிட்டிஷ் வீரர்களைக் காப்பாற்றினார்.

(முன்பக்கத் தொடர்ச்சி)

பார்த்தேன். அவளும் வைத்தியநாதனைத்தான் பார்த்துக்கொண்டிருந்தாள். அவள் முகத்திலே நான் அதுவரைகாணாத சோகம் தெரிந்தது. அவள்கண்களிலே நீர் வழிந்துகொண்டிருந்தது. குற்றால அருவியின் நீர்தான் அவள் முகத்திலே ஓடுகிறது என்று தான் பார்த்தவர்கள் சொல்லுவார்கள். ஆனால் அந்த நீர் கண்ணீர்த்துளிகள்! ★

துன்பத்திற்(கு) யாரே துணையாவார் தாமுடைய
நெஞ்சம் துணைஅல் வழி. 1299

பிரெஞ்சுக்காரரும் தோற்கடிக்கப்பட்டனர். வாஷிங்டன் புகழ் காலனிகள் எல்லாவற்றிலும் பரவியது.

பிரிட்டிஷார் அமெரிக்காவை அரசாண்டமுறைமீது அமெரிக்கர்கள் மிகவும் துவேஷம்கொண்டிருந்தனர். இறக்குமதிவரிகளை ஆட்சேபித்து 'பாஸ்டன்' துறைமுகத்தில் வந்துநின்ற கப்பலிலிருந்த தேயிலை அனைத்தையும் சிவப்பிந்தியர் வேடம் போட்டு கடலில் தூக்கிப் போட்டுவிட்டார்கள். உடனே காலனிமக்களுக்கும் பிரிட்டிஷாருக்குமிடையே சண்டைமூண்டது. இப்படியாக 1775ம் ஆண்டில் அமெரிக்க சுதந்திர யுத்தம் ஆரம்பித்தது.

தோட்டத்திலிருந்த வாஷிங்டன் காலனிவீரர்கள் படைக்கு தலைமை தாங்குவதற்கு அழைக்கப்பட்டார். நன்கு போர்ப் பயிற்சி பெற்று யுத்த சாதனங்கள் நிறையக்கொண்ட பிரிட்டிஷ் ராணுவத்துடன், பழக்கமேயில்லாத தொண்டர்படையை வைத்துப் போரிடுவது மிகவும்சிரமமாகவும் அசாத்தியமாகவும் தோன்றியபோதிலும் வாஷிங்டன் தலைமைப் பதவியேற்க ஒப்புக்கொண்டார். பனிக்கட்டிநிறைந்த நதியை இரவில் கடந்து திடீர்த் தாக்குதல் நடத்தி பிரிட்டிஷ் ராணுவமொன்றை அடிபணியச் செய்தார். ஆயினும் போர்சாதனங்கள் பெற்றிராத அவருடைய படைகள் அநேக தோல்விகள் கண்டன. வாஷிங்டன் தைரியத்தை இழக்காமல் போர்வீரர்களின்கஷ்டங்களில் தானும் பங்கெடுத்துக்கொண்டு குடியானவர்களிடம் உணவுக்காக யாசித்துப் பெற்றும் தம் வீரர்களை வீரம் குன்றாமல் குளிர்காலம் முடியும்வரை உற்சாகமூட்டிவந்தார். பின்னர் பிரெஞ்சுக்காரரின் உதவியால் 1781ம் ஆண்டில் பிரிட்டிஷாரைத் தோற்கடித்து வெற்றிக்கொடிநாட்டினார். காலனிகள் சுதந்திரம் பெற்றன. வாஷிங்டன் தம் வயலுக்குத் திரும்பினார். ஆனால் சீக்கிரமே புது ஐக்கிய அமெரிக்க அரசாங்கத் தலைமைப் பதவியேற்க அவர் அழைக்கப்பட்டார். இப்படியாக அமெரிக்க சுதந்திரத்திற்கே காரணஸ்தராயிருந்தவாஷிங்டன் 1789ம் ஆண்டில் அமெரிக்க முதல் ஜனாதிபதியானார். எட்டாண்டுகள் சேவை செய்தபின் தன்னலமற்ற சேவையின் சின்னமாக அவர் ஓய்வு பெற்றார். சமரிலும் முதல்வர், சமாதானத்திலும் முதல்வர், நாட்டு மக்கள் மனதிலும் முதல்வர் என அவரை அமெரிக்கர் புகழ்கின்றனர். அவர்தம் நினைவு போற்ற அமெரிக்கத் தலைநகர் அவர் பெயரால் வழங்குவதுடன் அவரும் அமெரிக்காவின்தந்தையென இன்றும் என்றும்போற்றப்பட்டுவருகிறார்.

1299 தஞ்சம் தாமல்லர் எதிலார் தாமுடைய
நெஞ்சம் தாம்அல் வழி. 1300

சினிமாச் செய்திகள்

'பெல்'

கலைக்குப் பரிசு!

சர்க்காரால் நிறுவப்பட்டிருக்கும் சினிமாப் பட கழகம் 1950 வது வருடத்திற்கென 'ஏழை படும்பாடு' (ஓட்டுகள் 64·38%) தமிழ்ப் படத்தையும், 'ஜீவிதம்' (ஓட்டுகள் 56·58%) தெலுங்குப் படத்தையும், நடிகர்களில் நாகையா, அஞ்சலி ஆகியோரையும் பரிசு பெறத் தேர்ந்தெடுத்திருக்கின்றது. சிறந்த படத் தயாரிப்பாளருக்கு ரூ. 350க்கு மேற்படாத வகையில் கோப்பையும், சிறந்த நடிகர்களுக்கு ரூ. 150க்கு மேற்படாத தங்கப்பதக்கங்களும் பரிசளிக்கச் சர்க்கார் முடிவு செய்திருக்கின்றனர்.

பொன்னி

காஞ்சனாவை வெளியில் அனுப்பிவிட்ட பக்ஷிராஜா ஸ்டுடியோஸ், தமது அடுத்ததயாரிப்பான "பொன்னி"யை ஆரம்பித்துவிட்டனர். ஏ.எஸ்.ஏ.சாமியிடம் டைரக்ஷன் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது. இதுதவிர லலிதா-பத்மினி, ஸ்ரீராமுலுவின் கூட்டுத் தயாரிப்புக்கென ஒரு ஏற்பாடு நடைபெற்று வருகின்றது.

மூன்று சகோதரிகள்

ஹாலிவுட் ஸ்டுடியோக்களில் இருந்து தேர்ச்சி பெற்ற N. R. பிள்ளை, 'மூன்று சகோதரிகள்' என்றபெயரில் தமிழ், மலையாளம் இரு பாஷைகளிலும் படம் தயாரிக்க ஏற்பாடு செய்துவருகிறார். இதில் லலிதா-பத்மினி-ராகினி மூன்று சகோதரிகளும், மூன்று சகோதரிகளாகவே நடிக்கின்றனர். டைரக்டர் சத்யபால் என்பவரே வில்லனாக நடிக்கிறார். இதில் விஜயகுமார் என்ற புதுமுகமும் அறிமுகமாக்கப்படுகிறார்.

பணக்காரி

பணக்காரிக்கான வெளிப்புறக் காட்சிகள் சமீபத்தில் உதகமண்டலத்தில் சுடப்பட்டன. இதற்கென டி. ஆர். ராஜகுமாரி உள்பட அனைவரும் உதகமண்டலம் வந்துபோயிருக்கிறார்கள். படம் வளரும் வேகத்தைப் பார்த்தால் விரைவில் வெளிவரவிருக்கும் லிஸ்டில் சேர்த்துவிடலாம்.

சந்த்ராணி

பரணியார் தமதுதமிழ்க்காதல் வெளியனுப்பப்பட்டபின் அடுத்த

புல்லா(து) இராஅப் புலத்தை அவருறும்
அல்லல்நோய் காண்கம் சிறிது. 1301

தயாரிப்பான 'சந்த்ராணி'க்கான ஏற்பாடுகளை இப்போதேசெய்து கொண்டிருக்கின்றனர். இதில் பானுமதிதான் சந்த்ராணியாக நடிக்கிறார். இதில் பிரமாதமான கத்திச்சண்டைகள் இருக்கின்றன வாம். இதற்கென பா னு ம தி ஸ்பெஷலாக ஸ்டண்ட் சோமு விடம் கத்திச் சண்டை பழகி வருகிறார்.

கண்கள்

பிரபல நடிகர் சகஸ்ரநாமம் நடித்த நாடகமான "கண்கள்" நேஷனல் பிக்சர்ஸாரால் படமாகத் தயாரிக்க ஏற்பாடுகள் முடிவடைந்துவிட்டன. இதில் சகஸ்ரநாமமே பிரதம பாகம் தாங்கி நடிக்கவிருக்கிறார். இவர்களது "பராசக்தி"யில் இன்னும் சில காட்சிகளே பாக்கியிருக்கிறதாம்.

அவாரா

ராஜ்கபூரின் அவாரா அகில இந்தியாவிலே வெற்றிக் கொடி நாட்டி வருவதினால், 'அவாரா'வை 10000 அடி நீளமாகக் குறைத்து, ஆங்காங்கே ஆங்கிலத்தில் டைடில் சேர்த்து வெளி நாடுகளில் திரையிட ராஜ்கபூர் தீவிரமாக ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கிறார். பிரிதிவிராஜ், ராஜ்கபூர் படங்கள், பாகிஸ்தானில் காட்டக் கூடாது என்ற தடை சமீபத்தில்தான் நீக்கப்பட்டிருக்கிறது.

சந்திரலேகா

சந்திரலேகாவைப்பற்றி நாம் அதிகம் சொல்லத்தேவையில்லை. இப்போது இதையே ஆங்கிலத்தில் டப் செய்ய ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. காரியவாதியான ஜெமினி வாஸன் இதை வெற்றிகரமாகச் செய்துமுடிக்கும்திறனுடையவர். அகில இந்தியாவில் வெற்றிக் கொடி நாட்டிய சந்திரலேகா உலகெங்கும் சென்று, இந்தியாவின் ஸ்தானத்தை உயர்த்துவாளாக என நாம் ஆசீர்வதிப்போம்.

மானத்தோடு வாழ்

ஏற்கனவே மணமகள் வெளிவந்துவிட்டது. இப்போது 'மருமகள்' 'மாப்பிள்ளை' தயாராகிக் கொண்டிருக்கிறது. எனவே, எனெஸ்கே தமது தயாரிப்பான 'மணமகனுக்கு' 'மானத்தோடு வாழ்' என்ற பெயர் கொடுத்துவிட்டார். இதை ஆகஸ்டுமாதத்தில் திரையில் எதிர்பார்க்கலாம்.

பெற்றமனம்

டைரக்டர் பிரசாத் 'பெற்றமனம்' என்று ஒரு சமூகக்கதையைப் படமாக்கத் திட்டமிட்டிருக்கிறார். இதில் கதாநாயகியாக நடிக்க புஷ்பவல்லிக்கு ஜெமினியார் அனுமதிதந்துவிட்டார்கள். 'பெற்ற மனம்' சம்சாரம்போல சக்கைப் போடு போடுமென எதிர்பார்க்கலாம்.

உப்பமைந் தற்றால் புலவி அதுசிறிது
மிக்கற்றால் நீள விடல்.

காதற்கடல்

தொடர் கதை ஊ211,N49 விருதை மகிழ்நன்

நேரம் ஆகஆக டாக்டர்களின் முயற்சிகள் தளர்ந்தன. காமுவும் அரியநாதரும் சுந்தரி அருகில் அழைக்கப்பட்டு நம்பிக்கையிழந்த செய்தியை அறிவிக்கப்பட்டனர்.

மணக்கோலத்தில் கண்ட மகளை, மறு ஆண்டே பிணக்கோலத்தில் கண்டார்கள். ஆம், சுந்தரி சுதந்திரபுரிக்குச் சென்றுவிட்டாள்.

முட்டினாள், மோதினாள், அழுதாள், புரண்டாள் காமு. அரியநாதருக்கு ஏற்கனவே இருந்த துக்கம் போதாதென்று இதுவேறு சேர்ந்துகொண்டால், மனிதனின் நிலையைப்பற்றிக் கேட்க வேண்டுமா?

அன்றுமுதல் இருவரும் ஏதோ கடனைக் கழிப்பவர்கள் போல் வாழ்க்கையை ஓட்டிவருகிறார்கள். இந்நிலையில் உள்ளவர்களைத்தான் நாம் ஆரம்பத்தில் கண்டோம்.

28வது அத்தியாயம்
மனமாற்றம்!

வெற்றிலைத்தட்டும், வெற்றிலை இடிக்கும் உரல் உலக்கைசகிதம் வந்த காமு, அரியநாதர் படுத்திருந்த ஈசிச்சேரின் அருகில் அமர்ந்து வெற்றிலை இடிக்க ஆரம்பித்தாள். உரலுக்குள் சிக்கிய பச்சைநிற வெற்றிலை, சுண்ணாம்பு, பாக்குடன் இடிபட்டு சிவப்பு நீர் கசிய உருமாறிக்கொண்டிருந்தது.

அதே நேரம், அவள் மனது தன் மகளின் கோரமுடிவையும், தான் மூத்தாள் மக்களிடம் நடந்துகொண்ட விதத்தையும் எண்ணி, ஆயிரம் சுத்திகொண்டு அறைந்து செந்நீரைப் பிழிந்துகொண்டிருந்தது.

கை வேலை செய்துகொண்டிருந்தாலும், மனப் போராட்டத்தில் அவள் தவித்துத் துடித்துக்கொண்டிருக்கிறாள் என்பதை அவளது கன்னத்தில் உருண்டு ஓடும் கண்ணீர்த் துளிகள் வெட்ட வெளிச்சமாக்கிக்கொண்டிருந்தன.

கொதிக்கவைக்கும் நீர் இளஞ்சூடாயிருக்கும்போது ஆவியாக மூடியில் நீர் திவலைகளாகபடியும்

அலந்தாரை அல்லல்நோய் செய்தற்றால் தம்மைப்
புலந்தாரைப் புல்லா விடல். 1303

ஆனால் சூடு அதிகமாகும்பொழுது மூடியையும் தூக்கி ஓசைப்படுத்தி பட,படவென்ற இரைச்சலுடன்பொங்குவதுபோல அவளது 'மனப்புயல்' ஆரம்பத்தில் கண்ணீரைமட்டும் பெருக்கினாலும், சற்றுநேரத்தில்உச்சத்தையடைந்து, பொருமலுடன் விம்மி, விம்மி வெளிக்குக் கேட்கும்படியான குரலை உண்டாக்கிவிட்டது.

'கல்யாணவீட்டிலேயே காலைக் கட்டி அழும் பெண்கள், இழவு வீட்டைக் கண்டால் விடுவார்களா?' என்றபடி ஓரே மகளைப் பறிகொடுத்தவள் வேதனைபற்றி நாமே சிந்தித்துப் பார்த்துக் கொள்ள வேண்டியதுதான்.

இடிபட்ட வெற்றிலையைக் கிளறி எடுத்து 'இந்தாருங்கள் இதைப்போட்டுக்கொள்ளுங்கள்' என்று அரியநாதரிடம் நீட்டினாள். அவரும் வேண்டாவெறுப்புடன்பெற்று வாயில் போட்டுக்கொண்டார்.

"என்னுங்க எனக்கு இருப்புக்கொள்ளவில்லை. எந்தநேரமும் பிள்ளை ஞாபகமாகவே வருகிறது. துணிமணி,நகைபோன்ற அவளது பொருள்கள் எதைப் பார்த்தாலும் என்னால் சகிக்க முடியவில்லை. கொஞ்சநாளைக்கு தேசாந்திரமாக, காசி, கங்கை, ஹரித்துவாரம் போய் நீராடிவருவோம். புதியபுதிய காட்சிகளைக் கண்டாலாவது மனது சற்று நிம்மதி அடைந்தாலும் அடையும்" என்று ஏங்கி ஏங்கி சிறுபிள்ளை போல் அழுதுகொண்டே கூறினாள் காமு.

ஏற்கனவேயே இவளது முன்யோசனையில்லா சண்டித்தனத்தினால் குடும்பத்தில் தொடர்வாக ஒன்றன்பின் ஒன்றாக நிகழ்ந்த சம்பவங்களால் நொந்துபோயிருந்த அவரது உள்ளம், இப்பொழுது அவளது பேச்சைக் கேட்டபொழுது சீற்றம்தான் கொண்டது.

"நீ செய்த பாவத்திற்கு காசி அல்ல கைலாசம் போனால்கூட கர்மம்தீராது! தாயில்லாப்பிள்ளையை தான்தோன்றித்தனமாக நடத்தி அவள் தாலியை அறுத்தாய். அந்தவினை உன் மகளைக் கொண்டுபோய்விட்டது. இன்னும் யாரையெல்லாம் கொண்டு போகக் காத்திருக்கிறதோ"

"ஏன் திரும்பத் திரும்ப அதைக் குத்திக்காட்டுகிறீர்கள். நான்செய்த குற்றத்திற்குத்தான் தக்க தண்டனை கிடைத்துவிட்டதே. வீணாக என்னைச் சித்திரவதை செய்யவேண்டாம். இனி ஆகவேண்டியதைக் கவனியுங்கள் தேசாந்திரம் போகாவிட்டாலும் பரவாயில்லை; நான் உயிருடன் இருந்து உங்களுக்குப் பணிவிடை செய்து, இக் கடைசிக் காலத்தில் உதவியாக இருக்க

ஊடி யவரை உணராமை, வாடிய
வள்ளி முதல்அரிந் தற்று.

வேண்டுமென்று உங்களுக்கு விருப்பம் இருந்தால் நான் இப்பொழுது கூறப்போகும் என் விருப்பத்தை உடனே நிறைவேற்றவேண்டும். இதை அலட்சியம் செய்தால் என்னை வெகு விரைவில் கட்டிலில் கிடத்தி, கர்மாதிக்குத் தயாராகிவிடவேண்டியதுதான் தாங்கள்'' அவளது உள்ளக் குமுறல் உச்சத்தை அடைந்தது.

அரியநாதருக்கு அவளது கடைசிச் சொற்கள் ஒருவித திகிலை உண்டாக்கியது. குழந்தைகள்தான் எல்லாம் கைக்கு உதவாது போய்விட்டன என்றால், இவளாவதுகடைசிக்காலத்தில் கஞ்சி ஊற்ற இருக்கிறாள் என்று நினைத்த அவருக்கு, அவளது புதிர் பெரும் பரபரப்பை உண்டாக்கிவிட்டது. எதைக் கூறுவாளோ? என்ன நடக்குமோ? என்று ஏக்கத்துடன் அவள் வாயையே பார்த்துக் கொண்டிருந்தார்.

"என்ன செலவு ஆனாலும் பரவாயில்லை. உடனே சென்று சேகரும், சரோஜாவும் எங்கிருந்தாலும்,என்னபாடுபட்டாகிலும், அவர்களைக் கண்டுபிடித்து அழைத்துவந்தே ஆகவேண்டும். ஜெயிலிலிருக்கும் சேகரை எத்தனை ஆயிரம் கேட்டாலும்—நம் நிலபுலன் பூராவையுமே ஜாமீன் கட்ட நேர்ந்தாலும் பரவாயில்லை கொடுத்துக் கூட்டிவர முதலில் வேண்டியதைச் செய்து, அவன் மூலம் சரோஜாவைப் பின் தேடுவோம். உடனே, இச்சனமே புறப்படுங்கள். முன்பெல்லாம் ஒருவர் செய்யும் வினை அவருக்குப்பின் அவரது வாரிசைத் தொடர்ந்து வாட்டி வதைக்கும் என்று கூறுவர். ஆனால் இப்பொழுதோ, குற்றம்செய்தவரை, அவர்காலத்திலேயேசித்திரவதை செய்துவிடுகிறது என்பதை என் வரையில்மிகத்தெளிவாகப்புரிந்து கொண்டேன். அவர்களைக்கண்டு மன்னிப்புப் பெற்றால்தான் என் ஜீவன் உங்கள் சேவைக்காக உங்கள் காலமட்டுமாவது நீடித்து இருக்கும்'' என்று மேல்மூச்சு, கீழ்மூச்சுவாங்கக்கூறிமுடித்தாள்

என்ன விபரீதத்தைக் கூறுவாளோ என்று கதிகலங்கி இருந்த அரியநாதர், அவள் சொன்னவற்றைக்கேட்டபொழுது நீண்ட பெருமூச்சு ஒன்று விட்டார். தன் மனைவி உண்மையிலேயே மனமாற்றமேற்பட்டுக் கூறுவதை நினைந்து மகிழ்ச்சி கொண்டாலும், தான் மேற்கொள்ள வேண்டிய வேலையை நினைத்தபோது பிரமிப்பே ஏற்பட்டது. காரணம் சேகர் விஷயம் கவர்ன்மெண்ட் சம்பந்தப்பட்டது. ஏற்கனவேயே வைத்திருக்கும் இடத்தைக்கூட கூற மறுத்துவிட்டார்கள். இருந்தா

நலத்தகை நல்லவர்க்(கு) ஏஎர் புலத்தகை
பூவன்ன கண்ணார் அகத்து.

1305

லும் அவளது பரிதாப நிலையை நன்கு உணர்ந்து, தன் சுயநலம் கருதியாகிலும் அவளது வேண்டுகோளைக் கவனிக்க ஆயத்தமானார்.

29வது அத்தியாயம்

கண்கலக்கிய கடிதம்!

காதல் என்பது பொதுவாக அன்பு, ஆசை என்று பொருள் படும்வார்த்தையாக இருந்தாலும் கூட, இச்சொல் தனித்தியங்கும் போது காமஇச்சையையேகுறிக்கும் வார்த்தையாக இந்நாளில் ஆகிவிட்டது. வயது வந்த ஒரு ஆண்மகனும், ஒரு பெண்ணும காதல் கொண்டார்கள் என்றால், இது மனவேட்கையால் எழுந்ததுமட்டுமல்ல அவர்களது நட்பு. உடல் சேர்க்கையையே முக்கிய கருத்தாகக் கொண்ட உணர்ச்சியேஇவ்விடத்தில்காதல். எனவே 'காதலும் காமமும்' ஒன்றையொன்று தழுவிப்படர்வதுதான். எது முந்தியது, எது பிந்தியது என்று கூறமுடியாது. ஆழ்ந்து சிந்தித்தால் காமத்தின் அடிப்படையில் பிறப்பதுதான் காதல் என்றுகூடக் கூறலாம்.

. உள்ளக் காதல் மட்டும் இரு உள்ளங்களிடையே இருக்குமானல், அவர்களுக்குநேரும்இடையூறுகளால்,கஷ்டங்களால் அவர்களது உள்ளம்தான் வலிவிழக்குமேதவிர உடல் தளரவேண்டியதில்லை. ஆனால் உள்ளத்துடன், உடல் வேட்கையும் சேர்வதால் தான், காதல் கொண்டவர்கள் பிரிவாற்றாமையினால், கைகூடாமையினால் உள்ளம் மட்டுமல்ல, உடல் நலிவுமெய்துகின்றார்கள் என்பதை நன்றாகப் புரிந்து கொள்ளலாம். இளமைஎன்னும் கிண்ணத்தில் ஊற்றி வைக்கப் பட்ட உணர்ச்சி என்னும் மது, உரிய காலத்தில் அருந்தி அனுபவிப்பாரின்றிஇருக்கநேர்ந்தால், காலம் கடந்து சென்றுகொண்டே இருந்தால், அது காற்றின் வெப்பத்தினால்வற்றிக்கொண்டேதான்போகும். ஆனால் வைராக்கியம்என்ற மூடிகொண்டு கெட்டியாக காற்றுப் புகாவண்ணம் பக்குவமாக அடைத்துவைத்தால் வற்றுவதிலிருந்து தடுக்கலாம். நீண்ட நாட்களுக்குப் பின்னும் அருந்திஅனுபவிக்கலாம். ஆனால் இதனால்ஏற்படும் ருசி கொம்பில் பழுதத கனியை கொய்தவுடன் புசிப்பதற்கும், இரண்டொரு நாட்களுக்குப்பின் சாப்பிடுவதற்குமுள்ள இனிமையைத்தான் விளக்கும். ருசிமட்டுமல்ல,பழம் கூடத்தான் பளபளப்புக் குன்றி தோலில் சுருக்கங்கள்கூட ஏற்பட்டுவிடும். நிறமும்கூட சற்று மாறுதலடையும். இவை நாம் சாதாரணமாக நாள்தோறும் நமது நடைமுறைவாழ்க்கையில் காணும் சம்பவங்கள்.

தனியும் புலவியும் இல்லாயின், காமம்
கனியும் கருக்காயும் அற்று. 1306

பள்ளிப் பிள்ளையாக துள்ளித் திரியும் நாளிலேயே, சேகர்மீது சாருபிணியின் இளம்உள்ளத்தில் துளிர்விட்டுப் படர ஆரம்பித்த காதற்கொடியின்வேர், அவளது தேகம்பூராவும் நரம்புகள் ரூபத்தில் வியாபித்து, உடம்பின் ஒவ்வொரு அங்கத்தையும் பற்றி, உணர்ச்சியால் உந்தப்பட்டு, இன்று நீண்ட பிரிவின் காரணமாக உடல் தளர்வுகண்டு, மேனி கருத்து, தேகம்சுருங்கிக் காணப்பட்டாலும்கூட, உள்ளம் தெளிவுடன், வைராக்கியத்தின் சிகரத்தை நெருங்கிக்கொண்டிருந்தது.

யுத்தத்தின் காரணமாக அகவிலைகள் வேறு விஷம்போல் ஏறிக்கொண்டே சென்றது. வருவாயோ மிகவும்குறைவு. ஊரோ சென்னை. இதில் ஓய்வு பெறும் தகப்பனருடன்வாழ்க்கைப்போர் நிகழ்கிறது சாருவிற்கு.

ஊரில் நிலபுலன்களை விற்று வந்து பேங்கில் போட்ட பணத்தின் வட்டியையும், சாருவின் சம்பள வருவாயையும் கொண்டு தான் நீண்ட நாட்கள் காலக்ஷேபம் நடந்துவந்தது. ஆனல் பின்னல் வர வர முதலிலிருந்தும் எடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. எத்தனை நாளைக்குத் தான் சாப்பிட்டும், சாப்பிடாமலும் திரியமுடியும்?

சிலசமயம் தனது வாழ்வின் வழியைப்பற்றிச் சிந்திக்க உட்கார்ந்துவிட்டால், சாருவிற்கு வெளி உலகமே மறந்துவிடும். வெள்ளித்திரையில் ஓடும் ஒரு சமூகச் சித்திரம்போன்று உள்ளத்திரையிலே அவளது வாழ்க்கைப்படம் ஓடும். தனது தோழி சரோஜாவுடன் பள்ளிவாழ்க்கையில் நிகழ்த்திய ருசிகரமான சம்பவங்கள், அதன்பின் ஏற்பட்ட பிரிவு, எதிர்பாராதவிதமாக அவளையும், அவள் அண்ணு சேகரையும் சந்தித்தது, மறுபடியும் அவர்களைக் காணமுடியாது போனது இவ்வளவும், கதையின் முன்பகுதியில் வரும் துன்பத்தைப்போன்றதுபோலவும், பின்பகுதி மகிழ்ச்சிகரமாக முடியலாம் என்றும் கனவு கண்டு காலத்தைப் போக்கிவந்தாள்சாரு

ஆனல் அவள் தந்தையின் எண்ணமோ வேறு விதமாக இருந்தது. சாருபிணியின் நிலை குறித்து அவர் கொண்ட வருத்தம் சொல்லி முடியாது. வயது வந்துபலவருடங்களாகியும், அவளது வாழ்க்கைக்கு உறுதுணை தேடிக் கொடுக்காது, அவளது அந்தரங்கத்தை அறியமுடியாது தவித்தார்.

என்னதான் நெருங்கி நேசமாக பெண்களை வளர்த்தாலும் தங்களது உள் உணர்ச்சிகளை சாடைமாடையாகக்கூட தன் தகப்பனரிடம்கூறுவார்கள் என்று எதிர்பார்க்கமுடியுமா? இந்நிலை

ஊடவின் உண்டாங்கோர் துன்பம் புணர்வது
நீடுவ(து) அன்றுகொல் என்று. 1307

யில்தான் சம்பந்தர் 'பறவைக்குச் சிறகும், புலி, சிங்கத்திற்கு நகமும், வறண்டசெடிக்கு வான் மழையும் எவ்வளவு தேவையோ அவ்வளவு அவசியம் 'அம்மா' மடந்தையர்க்கு என்பதைப் புரிந்துகொண்டார்.

நன்ருக தன் பெண்ணின் நிலையை உணர்கிருர். அவள் உடல் நலிந்துகொண்டே வருவதைக் கண்கூடாகக் காண்கிருர். ருதுவாகி பலவருடங்கள் ஆகிவிட்டதையும் யோசிக்கிருர். இருந்தும் அவரால் ஒன்றும் அவள் விஷயத்தில் காரியங்களை மேற்கொள்வதற்கியலவில்லை.

இரண்டொரு வரன் பெண் கேட்டு வந்தார்கள் சம்பந்தருக்கு ஆசைதான். ஆனுல் அவளது வைராக்கியத்தின்முன் எவ்வித பேச்சும் எடுபடவில்லை.

அவளுக்கும் கல்யாண ஏக்கை இருக்கத்தான்செய்தது. தன்னையொத்த பெண்களும், தனக்கு பல வருடங்களுக்குக் குறைந்த வயதுடைய பெண்களும் கல்யாணம்செய்து, பிள்ளைகுட்டியுடன் குஷாலாக இருக்கும் அவர்களைக் காணும்போது உணர்ச்சிவயப்பட்டசாருவிற்கு சபலஎண்ணம் வராமலா இருக்கும். இருந்தாலும் தான்கொண்ட "அண்ணன் வந்தபின்தான்கல்யாணம்" என்ற வைராக்கியத்தின் முடிவால் அத்துடன் சேகருக்கும் நற்காலம் வந்து வழிபிறக்குமென்ற அசைக்கமுடியாதஎண்ணத்தால், மனதைக்கட்டுப்படுத்தி, ஆசைக்கு இடமளிக்காது, டாம்பீகத்தைக் குறைத்து, எளிய வாழ்க்கையில் காலத்தைப்போக்கி வந்தாள். 'வைராக்கியத்திற்கு வனிதையர்' என்று புகழும்படி இருந்தது அவள் மேற்கொண்டு நடத்திய வாழ்க்கை.

இந்நிலையில்தான் ஒரு விபரீதம் நடந்தது. இதை அவள் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. ஆனுல் நடந்துவிட்டது.

ஒரு பெண் தனியாகச் செல்வதைத்தான் இந்த ஆண்கள் உலகம் விட்டுவைப்பதில்லையே. ஒன்று அவள் போகும் தூரம் வரை பின்னுலேயே கொண்டுவிட்டுச் செல்வது. அல்லது குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட இடத்தில் நின்று தினம் பார்த்துக் கிண்டல் செய்வது. தனது ஆவலுக்கு உடன்பட்டு வராதவளாகத் தெரிந்தால் கன்னுபின்னுவென்று வெத்துப் பேச்சுக்களைக் கட்டிவிட்டு ரகளை செய்து தூற்றித் திரிவது.

இவை வலிவிழந்த வனிதையர்களிடம் வாய்திறந்து திரியும் வாலிபர்கள்—ஏன் வயது கடந்த வாலிபர்களும்தான் — நடத்தும் வீரப்பிரதாபங்களாகும்.

சாருபிணிபள்ளிக்குப்போகும் பாதையில் ஒரு தெருக்கோடி

நோதல் எவன்மற்று நொந்தார்என்(று) அஃதறியும்
காதலர் இல்லா வழி. 1308

யில் உள்ள சில்லறை வெற்றிலை பாக்குக் கடையில் ஒருவன் நாள் தவறாது இவளது தரிசனத்திற்காகக் காத்து நிற்பதை இவள் அறிந்துவிட்டாள். முதல்இரண்டொரு நாள் இவள் இதைப் பொருட்படுத்தவில்லை. ஆனால் நாளடைவில் தனக்காகத்தான் நிற்கிறான் என்பதை அவனது நடை, உடை, பாவனைகளால் நன்கு புரிந்துகொண்டாள்.

அதுமுதல் அந்த இடத்தைக் கடந்துசெல்லும்வரை உயிரைக் கையில் பிடித்துக்கொண்டுதான் செல்வாள். வேறு பாதை மாற்றிக்கொள்ளலாம் என்றால் அது மிகவும் சுற்று. பார்ப்பவர்களுக்கும் விபரீதமாகத் தெரியும். எனவே தன் பள்ளியில் வேலை பார்க்கும் சக உபாத்தினிகளின் துணையை, அல்லது பள்ளிப்பிள்ளைகளின் வரவை எதிர்பார்த்து உடன் செல்வாள்.

எவ்வளவுதான் மனதைக் கட்டிப்பிடித்தாலும், அந்தக் குறிப்பிட்ட இடத்தில் கண்கள் எப்படியும் அவன் நிற்கிறானா என்று கவனிக்கவே செய்யும். அதே நேரம் அவனும் இவளைப் பார்ப்பான் ஒருவித அங்க அசைவுடன். இப்படியே இதை வளரவிட்டு வந்தால் ஆபத்து என்பதையும் உணர்ந்தாள். தகப்பனாரிடம் கூறவோ பயம்.

நாட்கள் கடந்தன. அன்று மாலை பள்ளியிலிருந்துவீடுதிரும்பியபொழுது ஒருதபால் அவளை எதிர்கொண்டு அழைத்தது.

ஆவலுடன் அதைவாங்கினாள். ‘அண்ணாவிடமிருந்தோ அல்லது மறைந்த சரோஜாவிடமிருந்தோ தான்வந்திருக்கும்’ என்று அவள் எண்ணியபோது அவளது பரபரப்பு உச்சத்தை அடைந்தது. கையில் கொண்டுவந்த புத்தகத்தை அப்படியே மேஜைமீது தூக்கி எறிந்துவிட்டு, நிலைகொள்ளா மனத்துடிப்பிற்கிடையே தன் அறைக்குள் ஓடிக் கதவைத் தாளிட்டுத் தபாலைஉடைத்துப் பிரித்தாள்.

கடித ஆரம்பமே ஆயிரம் தேள்கள் ஒன்றாக ஓரே நேரத்தில் கொட்டுவது போன்ற வேதனைக்குள்ளாக்கியது சாருவை. கண்கள் இருண்டன. மெய் சிலிர்த்தது.

(தொடரும்)

நீரும் நிழல(து) இனிதே; புலவியும்
வீழுநர் கண்ணே இனிது.

சந்தேகம் ஒழிக! "ஜாலி"

நாகரீகத்தை மிக விரைவாகப் பரப்பும் சாதனம் எது? மக்களின் ஒழுக்கம் குன்றி வருவதின் மர்மமென்ன?
—எஸ். நவநீதன், கொழும்பு.

இரண்டிற்கும் முக்கிய காரணம் சினிமாவே.

"கம்யூனிஸ்ட்டுகள் என் முதல் எதிரி அவர்களை ஒழித்துக்கட்டுவதற்காகவே நான் மந்திரி பதவி ஏற்றுள்ளேன்" இப்படி ராஜாஜி கூறுகிருரே முடியுமா?
—சி. கிருட்டிணன், ஆத்தூர்.

எறும்புப் புற்றை அடைக்காது எறும்பை நசுக்கிக்கொண்டிருந்தால் எறும்பு ஒழிக்கப்பட்டுவிடுமா? கம்யூனிஸ்ட்டுகளின் புற்று ரஷ்யா. இவர்களை ஒழிப்பதென்பது ராஜாஜியல்ல, எவராலும் முடியாதகாரியம்.

வயிற்றிலிருக்கும் குழந்தை பெண்ணு ஆணு என்று திட்டமாகக்கூற ஏதாவது சாதனங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதா?—எம். ரேவதி. திண்டுக்கல்.

இதுவரை இல்லை. சில அனுபவஸ்தர்கள் கர்ப்பஸ்திரீயின் உணவு, உட்காரும் விதம், படுத்திருக்கும் முறை இவைகளைக்கொண்டு குறிப்பாகக் கூறிவிடுகிருர்கள்.

ஒரு விஷயத்தை ஊரில் பரப்ப எந்த சாதனத்தை மேற்கொள்ளலாம்?
—சி. பெரியசாமி, விருதுநகர்.

எங்கும் போகவேண்டாம். வீட்டில் உள்ள பெண்களிடம் சொன்ஞலே போதும்.

மற்றப் பத்திரிகைகளில் விளம்பரங்களையும், சித்திரங்களையும் நீக்கிவிட்டுப் பார்த்தால் நம் 'மகிழ்ச்சி'யில்தான் விஷயப்பகுதி அதிகம் இருக்கிறது என்று கருதுகிறேன்.
—பொன்னம்பலம், தூத்துக்குடி.

அப்படியா? மிக்க மகிழ்ச்சி.

"வீட்டுக்கரசி பொம்பளை, இதைக் கேட்டுப்பாரு ஆம்பளை" இப்படி மதுரம் பாடுவது சரியா?
—பி. நடராசன், தென்காசி.

இக்கேள்வியிலிருந்து தாங்கள் கல்யாணமாகாதவர் என்று தெரிகிறது. சரிதானே?

கல்யாணமான ஒருசில மாதங்களில் ஆடவன் மனமும், பெண்ணின் மனமும் எப்படி இருக்கும்?
—திருவேங்கடம், பம்பாய்.

ஆடவன் மாமியார் திடகாத்திரமாக நீண்டநாள் இருக்கவேண்டுமென்று கருதுவான் பெண் மாமியாரிடமிருந்து தனிக் குடித்தனம் எப்போதுசெல்வதென்றுஏங்குவாள்

'விதவா விவாகம்' செய்ய முன்வருவார் அதிகமில்லை காரணமென்ன?
—மாரியப்பன், சென்னை.

பணம், செல்வாக்குக் கொண்டோர் இக்காரியத்தில் முன்மாதிரியாக நடந்துகொள்ளாததும், தாரம் இழந்த ஆடவர், கணவனை இழந்த பெண்ணைத்தான் கட்டிக்கொள்ள வேண்டும் என்ற சட்டத்தை அரசாங்கம் இயற்ருததும்தான்.

ஊடல் உணங்க விடுவாரோடு என்நெஞ்சம்
கூடுவேம் என்ப(து) அவா. 1310

"ஒருநாள் கணவன்"

[மதுசூரா]

நீலவானில் நீந்தி நெளியும் நிலவு. பக்கத்தில் பகட்டாக மின்னி பிரகாசிக்கும் விண்மீன்கள். இவைகள் காணும் கருத்தும் நினைவும் வானில் உலாவும் நிலவின்மேல்தானிருக்கும்.

இத்தனை இயற்கையழகையும் மாடியிலிருந்தவாறு அந்த பெண் அனுபவித்துக்கொண்டிருந்தாள். ஆனால் அந்தப் பெண்ணின் கருத்துமட்டும் தன் காலநிலையை எண்ணி ஏங்கியவண்ணமிருந்தது

அவளின் பக்கத்தில் ஒரு கல்யாணப் பத்திரிகை. சற்றுநேரம் நிலவைப் பார்த்துவிட்டு பத்திரிகையைப் பார்த்தாள். பார்த்ததும், அவளின் மனம் வெதும்பியது. கண்ட கண்களில் நீர்சுரக்க ஆரம்பித்தது. வானில் திரியும் மதியும், பத்திரிகையும் மறைய ஆரம்பித்தது. நினைவு மெதுவாக நெளிந்தது. உதடுகள் அசைவு கொண்டது.

* * * *

அவள் ஒரு பெண். காணும் ஆடவர்களின் அறிவு அனைத்தையும் கொள்ளை கொள்ளும் கட்டழகு. காமத்தை ஊட்டும் கண்கள். படிகம்போன்ற நன்முகம். முகத்திற்கு அழகு செய்யும் மூக்கு. தேகம் யாவும் தங்கத்தின் சாயல். பொதுவில் அங்கங்கள் ஒவ்வொன்றும் உணர்ச்சியை ஊட்டும். இத்தகையழகு கொண்டபெண். அவளை ஏனோ திருமணம் செய்துகொள்ள எவரும் முன்வரவில்லை.

அந்தப் பெண்ணின் உள்ளம் ஏனைய மாதரைப்போல் இல்வாழ்க்கையை இன்பமுடன் நடத்தவேண்டும் என்று ஏங்கியது. கணவனுடன் கலந்து வாழவேண்டும் என்று அவளின் அறிவு அறிவுறுத்தியது. நல்ல எண்ணங்கொண்டு வாழவேண்டுமென்றுஎண்ணியபெண். ஆனால் உலகம் விபசாரி என்று கூறி அழைத்து, அவளின் எண்ணத்தைச் சிதறடிக்கச் செய்கிறது.

அவள் விபசாரியல்ல. வீணர்கள் நிறைந்த கலை உலகமான நாடகத்தின் பெரும் நடிகை. மாசு அற்றவள். கற்பு அழியாதவள். ராஜம் என்றால், அந்த வட்டாரமே தனி மோகங்கொள்ளும், அவளின் பாட்டுக்கும், நடிப்புக்கும். அத்தனை பெரும் புகழ் கொண்டவள்.

பெண்ணியலார் எல்லாரும் கண்ணில் பொதுஉண்பர்
நண்ணேன் பரத்தநின் மார்பு.

* * * *

"என் தோழிகளுக்கு திருமணம் நடந்துகொண்டே இருக்கிறது. எனக்கு மட்டும் அந்த ஆவலில்லையா? ஏ...சண்டாள தெய்வமே! நான் உணர்ச்சியற்றவளா? நானும் பெண்தானே? என்னை மனைவியாக்கிக்கொள்ள எவரும் முன்வரமாட்டார்களா? ஐய்யோ! மணமகளாகி குலமகளாக வாழமுடியாதா?" என்று தேம்பித்தேம்பி அழுதாள்.

இந்தக்குரல் கேட்டு பின்னால் நின்றுகொண்டிருந்த ராஜத்தின் தந்தையின் உள்ளம் நடுநடுங்கியது. "கண்ணே! கலங்காதே!! உன் வாழ்வைக் கெடுத்த மகா பாவி நான்தான். கலை என்று எண்ணி உன் வாழ்வைக் கொலை செய்துவிட்டேன்" என்று ஓலமிட்டார்.

"அப்பா!" என்று அலறி அவள் தந்தையின் காலடியில் வீழ்ந்தாள். "அம்மா! ராஜம் எழுந்திரு" என்று தழுதழுத்த குரலில் கூறிக்கொண்டே தூக்கினார்.

"அப்பா! நான்......"என்று விம்மிவிம்மி அழுதாள்.

"ராஜம்! என் மதியீனத்தால் உன்வாழ்வு பாழானது. ஆனால் ராஜம்! எனக்குமட்டும், உனை மணமகளாக பார்க்க மனமில்லை என்றுஎண்ணுகின்றாயா?" அவரின் கண்களில் நீர் ஓடியது.

டும்டும் என்று மேளத்தின் சத்தம் கேட்டதும், வெளியே எட்டிப் பார்த்தனர். வீதியில் விளக்குகள் புடைசூழ கலியாண ஊர்வலம் சென்றது. விண்ணில் வட்டமிடும்வான்மதி, மண்ணின் மீது தன் பொன்னிற கிரணத்தால் வீசி மேலும் அத்திரு மணத்தை அழகு செய்தான். இதைப் பார்த்த ராஜத்தின் உள்ளம் வேதனை தாங்க முடியாமல் போகவே, தன் அறைக்குள் ஓடி விட்டாள்.

ராஜம் 20 வயதை எட்டிப் பிடித்த யுவதி. பருவத்தின்பிடியில் பாவையான ராஜத்தால் போராட முடியாமல் தத்தளித்தாள். உணர்ச்சி உந்தியது. எண்ணி ஏங்கினாள் ஓர் ஆடவன் அணைப்பிற்காக. அதிக ஆசை. ஆனால் ஆடவர்கள் எவரும் முன்வரவில்லை. விம்மியது அவள் நெஞ்சு. துடித்தது அவளின் அதரங்கள். எண்ணத்துக்கிடையில் துக்கமும் சூழ்ந்து மேலும் மேலும் உணர்ச்சியை அதிகமாக்கத் துணை செய்தது.

தாங்க முடியவில்லை அவளின் ஆசை. அடங்கவில்லை அவள் தாபம். கிளறியது அவளுக்குக் காமம். இதற்கிடையில் அவளின் பழைய நினைவு வந்ததால் உணர்வு ஓய்ந்தது. எண்ணம் வளர்ந்தது.

* * * *

ஊடி இருந்தேமாத் தும்மினார் யாம்தம்மை
நீடுவாழ்க! என்பார்க்(கு) அறிந்து. 1312

ராஜத்திற்கு வயது 10. சினிமாவில் வரும் எந்தப் பாட்டும், நடனமும் பார்த்த மறுநாளே பார்க்கலாம் ராஜத்திடம். ராஜத்தின் நடனம்கண்டவர்கள் மனக் களிப்புக்கொள்வர். பொழுது போகாத பெண்கள் எல்லோரும் ராஜத்தைஆடச்செய்தும், பாடச் சொல்லியும் தன் பொழுதைப் போக்கிக்கொள்வார்கள். நாளடைவில் ராஜத்தின் நடனம், பாட்டு இவைகள் நல்லதொரு காளுக்கு உபயோகிக்க ஆரம்பித்தனர். முடிவாக அந்த ஊரில் ஒரு காரியம் என்றால், அங்கு ராஜத்தின் கச்சேரி நிச்சயம் உண்டு என்று எல்லோருக்கும் தெரியும்.

இவ்விதம் நாள் வளர, புகழ் வளர ஆரம்பித்தது. அந்தஊரில் பெரிய ஆபீஸரில்லத்தில் திருமணம். அவர் ராஜத்தின் ஆட்டத்தைக்கண்டு தன்னில்லத்தின் திருமணத்திற்கு ஏற்பாடுசெய்துவிட்டார் ராஜத்தின் தந்தையின் ஆதரவுடனே. அத்திருமணத்தில் மிகவும் உயர்ந்தரகம் என்று புகழ்கொண்டது ராஜத்தின் பாட்டும், நடனமும். வந்தவர்கள் பலர் சேர்ந்து ராஜத்திற்கு "கலைராணி" என்று பெயர்சூட்டினர்.

பல சந்தர்ப்பங்கள் சேர்ந்து ராஜத்தின் கலையை திசையெங்கும் பரவச் செய்தது. பருவமடைந்தாள் ராஜம். ஆனால் அவளின் ஆட்டமும், பாட்டும் மட்டும் ஓயவில்லை. தட்டமுடியாத நண்பர்களால் ராஜம் நாடகக்காரியாகிவிட்டாள். பணமும் சேர்ந்தது. ஆனால் ராஜத்தை விபசாரி என்று விலைகூறி மதித்தது உலகம்.

தடையிட நினைத்தார் ராஜத்தின் தந்தை. மறுக்க முடியாத நண்பர்களின் சீற்றம் ஓர்பக்கம். அவமானம் மற்றொரு பக்கம். தடுமாறினர், எண்ணினர். சொன்னர். ராஜத்தின் நடிப்பை காண விரும்பினால், பணம் 200 வேண்டும் என்று கூறினர். ஆனால் அதையும் கொடுக்கமுன் வந்தனர். காரணம் ராஜம் என்றால் அந்த வட்டாரத்தில் தனி பெயர். நல்ல கூட்டமும் கூடும்.

ராஜத்தின் தந்தை முடிந்த அளவு தடையிட நினைத்தார். ஆனால் அவரின் நினைவு தோல்வியடைந்தது. இன்று பெரிய பணக்காரியானாள் ராஜம். என்ன பயன். ராஜத்தைக் கற்பழிக்க பலர் முனைந்தனர். "திருமணம் செய்துகொள். பின்னால் உன் ஆசை............" என்று கூறியதும், ஓடிவிட்டனர் காமாந்தகாரர்கள். கிராதகர்கள் சூழ்ந்த இடத்தில் சொக்கத் தங்கமாக விளங்கினாள் ராஜம். ஆனால் மாலையிடஎவரும்முன்வரவில்லை.

* * * *

கோட்டுப்பூச் சூடினும் காயும் ஒருத்தியைக்
காட்டிய சூடினீர் என்று. 1313

ராஜம் சாப்பிட வா, என்றதும் சிந்தனைசிதறியது. உணர்வு வந்தது. முகம் வெளிறிப்போயிருந்த ராஜத்தைக் கண்டதும், ‘‘உடம்பிற்கென்ன?’’ என்று கேட்டாள் ராஜத்தின் தாய். ‘‘தலைவலிக்கிறது. உடம்பு அசதிகொள்கிறது. ஆகையால்...’’

‘‘ஐயோ! அம்மா!! சாப்பிடாவிட்டால், இந்தப் பாலையாவது’’

‘‘ஒன்றும்வேண்டாம். தொந்தரவு செய்யாதீர்கள்’’ என்று ராஜம் சொன்னதும், பதில் பேசாது கீழே இறங்கிப் போய் விட்டாள், ராஜத்தின் தாய். உணர்ச்சி தாங்கமுடியாதுபோகவே, எண்ணமிட்டது ராஜத்தின் உள்ளம். சிந்தனை உதிர்ந்தது. வெற்றி கண்டது அவளின் கருத்து. அந்தக் கருத்து இதுதான். ‘நாளை தன்னுடன் (அமெச்சூர்) நாடகத்தில் கதாநாயகனாக நடிக்கும் நபரை தன் கணவனாக வரித்துக்கொள்வது’ என்ற எண்ணந்தான்.

மறுநாள் நாடகம் முடிந்தது. அன்று ராஜத்தின் காதல்நடிப்பு மிகவும் பிரமாதம் என்று புகழ்ந்தனர், நாடகம் பார்த்த மனிதர்கள். கதாநாயகனுக்கு காமம் தலைக்கேறிவிட்டது. ராஜத்தை நெருங்கினான். பதில் பேசாது ‘‘சரி’’ என்று தலையசைத்து விட்டாள்.

‘‘அன்பே’’ என்று அணைக்க கரத்தை நீட்டினான். கரத்தைப் பற்றி, ‘‘நண்பரே என் எண்ணத்தைக் காத்தால், தங்களுடன்... ......தடையில்லை’’ என்று சொக்குப்பொடி போட்டுவிட்டாள்.

‘‘ராஜம் தடையில்லாமல்செய்கிறேன். சொல் தயங்காதே’’

‘‘தாங்கள்......என்னை மணம் செய்துகொள்ள வேண்டும்!’’ புகைந்த நெருப்பில் நீர்விட்டால் எவ்விதமோ? அவ்விதம் அவனின் ஆவல் தணிந்தது. ‘‘ஏன்? மணம் செய்துகொள்ள மனமில்லையா?’’

‘‘...............’’

‘‘சொல்லுங்கள்’’

‘‘நான் வருகிறேன் ராஜம்’’

‘‘போகாதீர்கள். மன்றாடுகின்றேன். மறுக்கமாட்டேன் என்றீர்கள்; இப்போது......’’

‘‘ராஜம் நீ.........’’

‘‘நான்கற்பழிந்தவள்; விபசாரி என்று கூறுகிறீர்களா? இல்லை. பெருமையுடன் கலையில் இருந்தேன். ஆனால் என் கற்பைமட்டும் மிகவும் கவனமாக காத்துக் கொண்டேன். தர்மத்திற்கு தலை வணங்குவேன். அதர்மத்தை அலறடிப்பேன். நண்பரே நான் வஞ்சகி என்று எண்ணாதீர்கள். என்னை நம்புங்கள். இது என் கலையின்மீது ஆணை’’

‘‘நான் மணம் செய்துகொள்வேன். ஆனால் நான் அனாதை’’

யாரினும் காதலம் என்றேனா ஊடினாள்
யாரினும் யாரினும் என்று. 1314

"பரவாயில்லை"

"ஆனால் ஊரார்......"

"கிடக்கிறார்கள் சுயநலப்பேய்கள்"

"நான் மறுக்க மாட்டேன். ஆனால் என்னை நம்பி வாழும் என் மாமன் மகளுக்கு துரோகம் செய்யமாட்டேன். மேலும் இந்த உடல் அவளின் உப்பால் தான்வளர்ந்தது. ஆகையால்..."

"நானும்உங்களைத்தான் நம்பியிருக்கிறேன்"

"நடக்காது ராஜம்"

சிறிது நேரம் யோசித்தாள் ராஜம். கண்ணீர் வழிந்தது. ஐயோ! இவளின் வாழ்வு இவ்விதமாகவா இருக்க வேண்டும். இன்பத்துடன் இருக்கவேண்டியவள் துன்ப சாயல்கொண்டு துயருடன் வாழ்வதா? நாடகத்தில் நடித்ததினால் அவள் விபசாரி! ஆனால் பணங்கொண்ட பாவையர்களை, தங்கள் ஆவலை அடுத்தவனுடன் கூடும் அரை விபசாரியை கற்புக்கரசி என்று கூறும் இந்தப் பாழும் உலகம். நல்ல வாழ்வு வாழ எண்ணங்கொண்ட ராஜம், கண்ணீருடன் "அப்படியானால்சரி. என்னை ஒருவருக்கும் தெரியாமல் மாலையிட்டு, அன்று இரவு என்னுடன் கூடி மகிழ்ந்து, தங்கள் கையாலே ஒருதுளி விஷம்......"

"விஷம்.........நஞ்சா"

"ஆம், நஞ்சைத்தான் சொல்கிறேன்" இதைக் கேட்டதும் மனம் நடுங்கி, பயங்கொண்டு தன்வழி போக எத்தனித்தான். நடக்க நினைத்தவனை கையைப் பற்றிக்கொண்டு, "இல்லை என்றால், ஒருவருக்கும் தெரியாமல் என்னைத் தாலியிட்டு, என்னைக் காப்பாற்றுங்கள். மன்றாடுகின்றேன். மறுத்துவிடாமல் மனங்கொண்டு இந்தப் பெண்ணைக் காப்பாற்றுங்கள்"

யோசித்தான். எண்ணினான். நேரம் சென்றது. என்னசொல்வாரோ என்று ஏங்கிய ராஜத்திற்கு உயிர் கொடுத்ததுபோல் "சரி" என்று தலையசைத்தான்.

மாற்றாருக்குதெரியாமல் மாலையிட்டான் சுந்தரம். ஆம், சுந்தரம்தான் ராஜத்தின் கணவன். அன்று இரவு பள்ளியறை. பட்டுமெத்தை. பலவகையான பழங்கள். இனிய மணம் கும்மென்று வீசியது. இருவரும் இன்பகீதம் பாடினர். கண்டனர் தனிசுகத்தை. ராஜத்தின் ஆவலும் தீர்ந்தது. காணாத உலகம் கருத்தில் வந்தது. மகிழ்ந்து இருந்தனர்.

விடிந்தது. ராஜத்தை சுந்தரம் எழுந்து தட்டினான். ஆனால் ராஜம்நீங்காததுயில்கொண்டாள். விஷமுண்டு இறந்துவிட்டாள். அலறினான். நிறுத்தப்பட்டான் கோர்ட்டில் கொலைக்காரனாக.

இம்மைப் பிறப்பில் பிரியலம் என்றேனாக
கண்நிறை நீர்கொண் டனன்.

"கொலைகாரன்"

பாபநாசம்
'மாலி'

அடுக்கடுக்காக வருகின்ற பல ஆபத்துக்களையும், துன்பங்களையும் சமாளிக்க, ஏழைக்குத்தான் வலிமையுண்டு. ஆனால் எல்லை மீறிய தொல்லைகள் அவனை அண்டும்போது அவற்றை பொறுக்கு மட்டும் பொறுக்கிறான். இறுதியில் அவன் நிலை மாறுகிறது. ஏதுமில்லாத அவன் உடலில் வீரமும், புத்துணர்ச்சியும் எழுகின்றன. தன் உடல் விடுதலைக்கும், உள்ள மீட்சிக்கும் செயலாற்றுகிறான். போராடத் துணிகிறான். சமூகத் துரோகியாகிறான். சிக்குகிறான். குற்றவாளியாகிறான்.

(முன்பக்கத் தொடர்ச்சி)

உலகம் உண்மை தெரியாது, பணத்திற்காக கற்பைக்கெடுத்து விட்டு கொலை செய்துவிட்டான் என்று கூறியது. அவளின் எண்ணம் ஈடேறியது. சுந்தரத்தின் உயிரும் ராஜத்தை தேடிச் சென்றது தூக்குமேடை உதவியால். நினைத்ததைச் சாதித்துக் கொண்டாள் ராஜம். ஆனால் தெரியுமா உலகாருக்கு சுந்தரம் ராஜத்தின் "ஒருநாள் கணவன்" என்பது. ★

அழகிரி ஒரு அன்னாடங் காய்ச்சி—ஏழை—உலகத்தார் எவருக்கும் உயிர்ப்பிச்சைகொடுத்து விட்டுத் தங்கள் ஒட்டியகன்னங்களுடன், குழி விழுந்த கண்களுடன், கூட்டுமார்புடன், இயங்கும் சக்தியற்ற உடலங்கங்களுடன், நடைப்பிணங்களாய்த் திரியும் உழவர்வழி வந்தவன். அஞ்சாநெஞ்சன். சிறந்த உழைப்பாளி. வறுமையையே தன் வாழ்க்கைத்தோழனாய்க்கொண்டு ஒவ்வொரு நாளும், கதிரவன் வானத்தில் வருமுன்பு, தான் எழுந்து சென்று, நடு வயலில், நண்டுகளிடமும், நத்தைகளிடமும்உறவாடிச்சாயும் பாட்டாளி. இரண்டே குழந்தைகள். மூத்தவள் அமிர்தம். தன் அத்தை மகனையேமணந்து, அடுத்த குடிகாட்டில் வாழ்ந்து வந்தாள். முருகன் சிறுவன்.

அவனைப்பற்றி ஓர்நாள் "தலைமுறை தலைமுறையாகத்தான் இதே எழவுத் தொழிலை செய்து வந்திருக்கோம். என்ன கண்டோம்? நம்ம முருகனை எப்படியாவது படிக்கவைத்து, ஏதாவது வேலைக்கு அனுப்பலாம்"

உள்ளினேன் என்றேன்மற்(று) என்மறந்தீர் என்றென்னைப்
புல்லாள் புலத்தக் கனள்.
1316

என்று கூறிய அழகிரியின் தீர்மானம் அவன் மனைவி வீரம்மாளால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

முருகன் பள்ளிக்கூடப் படிப்புக்காக பட்டணவாசம் செய்ய ஆரம்பித்தான். அவன் ஒவ்வொரு வருடமும் படிப்பில் உயர உயர, அழகிரியின் உழைப்பும், வயதும், சக்திக்குறைவும் மென்மேலும் உயரலாயின. இந்த ஆண்டுதான் முருகன் பத்தாவது வகுப்பை எட்டிப்பிடித்தான். அத்துடன் அழகிரிக்கு எங்கிருந்தோ வந்த இருமல்நோய் பிடித்தாட்ட ஆரம்பித்தது.

அதனால் பள்ளிச் சம்பளம் கட்ட முடியவில்லை. தன் எஜமானன் ஜெமீனை அண்டித் தன் மகனுக்குச் சம்பளம்கட்டவேண்டியதைப்பற்றிக் கூறிக் கெஞ்சினான். எப்படி அவருக்கு இரக்கம் பிறக்கும்? பொதுவாகவே முருகன் கூலி விவசாயியின் மகனல்லவா? அவன் உயர்வில் ஊக்கம் காட்ட, அவருக்கு எண்ணம் பிறக்கமுடியுமா?

அழகிரியின் நிலையுணர்ந்து முருகன் பள்ளிக்கூடத்தைவிட்டுவிட்டு, தன்கிராமமான முள்ளிக்காடு வந்துசேர்ந்தான்.

அன்றுமுதல் அழகிரிக்குப் பதிலாக உழவு வேலை செய்ய முருகன் முனைந்தான். தன் தகப்பனைச் சட்டப்படியும், உலக நடைப்படியும் அடிமைப்படுத்திக்கொண்ட ஜெமீன் செல்வநாயகம்பற்றி அவ்விளைஞன் அடிக்கடி எண்ணமிடலானான். அவரதுபோக்கில் வெறுப்பும், அருவெறுப்பும் தோன்றியது அவனுக்கு. பெயருக்கு ஏற்றாற்போல, அவர் தன் செல்வத்தை பதுக்கும் திருப்பணியிலே ஈடுபட்டு, ஏழை உழவர்களின் நிலையையும், உழைப்பையும் உணராமல்திரியும் அவரது நிலைகண்டு சினந்தான். அவரைக்காண அவன் உடல் சினத்தால் துடித்தது. மனம் தளர்ந்து, தளர்ந்து உயர்ந்தது.

அந்த ஏழையின் உடலில் அச்சமயம் ஒரு வலிய சிங்கத்தின் இரத்தம் ஓடலாயிற்று. அவனது உள்ளக் கருத்துகள் உருப்பெறலாயின. அவன் தன் கருத்துக்களை மெள்ள, மெள்ள வரப்பில், வாய்க்காலில், களத்துமேட்டில், ஊர்ப்புறத்தில் தெரிவிக்கத்தொடங்கினான் ஒன்று, பத்து, நூறாக அவன் பக்கம் ஆயிரம் உழவர்கள் திரண்டுவிட்டனர். "உழவர் முன்னேற்ற சங்கம்" அமைத்துவிட்டான். அவனது இடைவிடாத தொண்டினால், ஏழைக் குடியானவர்கள் தங்கள் கடமையை உணர்ந்து நடந்தனர். அவர்களிடத்தில் 'புரட்சி' மனப்பான்மை வேரூன்றியது.

வழுத்தினள் தும்மினே னாக; அழித்தழுதாள்
யாருள்ளித் தும்மினீர்? என்று.

"உரிமைக்குப் போராடும் கடமை உணர்ச்சி" பெருகுவது உழவர்களுக்கு நன்மை தருவதாயிருக்கலாம். அச்செயல் ஜெமீன் செல்வநாயகத்தின் நாணய முத்திரையைக் கொஞ்சம் குறைப்பதல்லவா?

சில மாதங்கள் ஓடின. ஒரு நாள் முள்ளிக்காடு கிராமத்தில் பாட்டாளி மக்கள் பல்லாயிரவர் கூடிய பெரிய பொதுக்கூட்டம் ஒன்று கூட்டப்பட்டது படித்தவர், படிக்காதவர், செல்வந்தர், ஏழைகள் யாவரும்கூடிய பெரும் கூட்டமாக இருந்தது அது. அதில் ஒரு இளைஞன் உணர்ச்சி மிக்க நடையில், புரட்சிக் கருத்துக்களை அள்ளி வீசிக்கொண்டிருந்தான்.

'ஐயா, மதிப்பிற்குரிய ஜமீன்தார் கனம் செல்வநாயகம் அவர்களே! நாங்கள் யார்? உங்கள் நலனுக்கே பரம்பரை,பரம்பரையாக உழைத்துவரும் ஏழை விவசாயிகள். எங்கள் உரிமையை உங்களிடம்தானே கேட்டாக வேண்டும்? நீங்கள்தானே எங்களுக்கு வழிதரவேண்டியவர்கள். நீங்களோ தேசபக்தர். 'அன்பே சிவம்' என்ற உயரிய சைவசித்தாந்தத்தைக் கையாளுபவர். உங்கள் பக்தி உண்மையானால், நாட்டில் உள்ள நலிந்தோர்மேல் நல்லெண்ணம் இருக்குமானால், வறுமையால் வாடப்பட்டு வருந்தும் உழவர்களாகிய எங்களுக்கு உதவி செய்து காப்பாற்றுங்கள்.

'உழுகின்ற நிலம் உழவனுக்கே சொந்தம்' ஆகப்போகும் நாள் விரைவில் வருகிறது. உங்களிடம் நாங்கள் பிச்சை கேட்க இச்சைப்படவில்லை. சோற்றுக்குத் திண்டாடி, ஊதியம் போதாமல், எல்லோரும் ஒன்று கூடி உங்களை நாடிவந்தால், மறுத்துப் பேச மனதில் நினையாதீர். நீங்கள் நியாயமாகத் தரவேண்டிய உதவியைத்தரமுன்வராவிட்டால் உழவர்கள் பலாத்காரத்தையே நாடுவர். அது உறுதி. நியாயமுமாகும். வீண்கூட்டம் உங்களிடம் விதண்டாவாதம் செய்யவில்லை. கோழைகள் கூட்டம் உங்களிடம் கூச்சலிடவில்லை. உங்கள் உயிர் நிலைத்திருக்கக் காரணமான நாங்கள் கோருகிறோம். மறுக்காதீர்.

உரிமை கேட்கும் நாங்கள் கடமைமீறியவர்களல்ல. பிறந்து இறக்கும்வரை, உங்கள்நன்மைக்கேஉழைத்து உருக்குலைகிறோம். அதற்காக எங்கள்மேல் சீறுதீர்கள். எசமானர்கள் உச்சிமாடி வைத்துக்கட்ட உழைத்துவிட்டு, நாங்கள் மச்சில்லாக்குடிசைக்குள் ஒண்டிக் கிடக்கிறோமே...அதற்காக எங்கள் கோரிக்கைகளைக் கேளுங்கள்.

நாங்களிருப்பது ஓட்டைக் குடிசை. அதைச்சுற்றி ச

தம்முச் செறப்ப அழுதாள்; நுமருள்ளல்
எம்மை மறைத்திரோ என்று.

கொசுக்கள் தங்கும் சாக்கடைத் தேக்கம். அக்குடிசையில்கிடப் பதுஒன்றரைச்சாண்பாய். அதில் எங்கள் மனைவியும் மக்களும் வதைகிறோம். இதற்காக எங்களுக்கு உதவிசெய்ய முன்வாருங்கள். 'ஏழை அழுத கண்ணீர் கூரியவாளை ஒக்கும்' என்பதை மறந்துவிடாதீர்கள். இதுவே எங்கள் பணிவான கோரிக்கை —கடைசி எச்சரிக்கை—இறுதி முழக்கம்.''

இப்படிப் பேசி முடித்தான், அந்தப் பதினெட்டு வயது இளைஞன் முருகன். தீப்பொறிபறக்க அவன் பேசிய கருத்துக்கள் ஏழைகளின் உள்ளப் பண்பை, நிலையைப் படம்பிடித்ததேபோன் றிருந்தன. அவன்பேச்சு அங்கு கூடியிருந்த ஏழைகளுடைய காதுகளுக்கு இனிய கீதமாக மட்டுமல்ல, துன்பம் தீர்க்கும் மருந்தாகவும் இருந்தது. அது அவர்கள் உணர்விற்கு தூண்டு கோல். ஆனால் அவனது உளறல்...அதிகப்பிரசங்கம்...துரோக வார்த்தைகள்......ஜெமீன்தார் செல்வநாயகம் காதுகளில் காய்ச்சி ஊற்றப்பெற்ற ஈயமாகத்தான் இருந்தது. ஆட்கள்மூலம் முருகன் பேச்சில் தெரிந்த தீவிரம் கேட்டுத் திடுக்கிட்டார். திகைத்தார். சிறிதுநேரம் கழிந்தது. பூத்தார் புன்முறுவல். நகைத்தார். ஏன்?

"உங்கள் திகைப்பை தீர்க்கும் சஞ்சீவி இதோநானிருக்கிறேன்'' என்று கூறியது, அவரது இரும்புப் பெட்டிக்குள்ளே முடங்கிக் கிடக்கும் பல லட்சக்கணக்கான ரூபாய்—பணம். அதுதான் 'ஊம்' என்று தலையசைக்கச் செய்தது. எடுத்து வீசினார் கொஞ்சம். அது மதிப்பில் கொஞ்சம்தான்...பங்கிட்டுக் கொண்டதோநான்குபேர்...அது செய்த வேலையோ?...அப்பப்பா! கொலை! கொலை!!

தீப்பொறி பறக்கப் பறக்கப் அன்று மேடையில்பேசியதீரன், நியாயவீரன் நள்ளிரவில் தூக்கி வரப்பட்டு, வாயில் துணிவைத் தடைக்கப்பட்டு, ஜெமீன்தாரின் மாட்டுத் தொழுவத்தில் மண்ணெண்ணெய் ஊற்றி உயிருடன் கொளுத்தப்பட்டான். அவன் வெந்து மடியும் நிலைகண்டு ஒரு வெற்றிச் சிரிப்புச் சிரித்தான் அந்த வரட்டுஜெமீன். இந்தச் சதி, அக்கிரமம் யாருக்குத்தெரியும்? ஜெமீனுக்கும், சதிகாரர் நால்வருக்கும், என்றுமே அபயம் தரக் காத்துக்கொண்டிருக்கும் ஆண்டவனுக்குத்தான் தெரியும்.

மறுநாள் விடியற்காலை தனது நீங்காதசெல்வமான ஒரு பெரிய இருமலுடன் குடிசையைவிட்டு வெளியே வந்த அழகிரி, திடுக்கிட்டுப்போனான். முருகன் படுத்திருந்த பாய் கிடந்தது.

தன்னை உணர்த்தினும் காயும்; பிறர்க்குநீர்
இன்நீரர் ஆகுதிர் என்று.

ஆனால் முருகன்? அலறினான். அனைவரும் கூடினர்—தேடினர்—திகைத்தனர். பொழுதுவிடிந்தது. தேடின பலரும் ஏமாற்றத்துடன் திரும்பினர். அவன் இவ்வுலகில் இருந்தால்தானே, இவர்கள் கண்ணில்பட?

"இந்த ஜெமீன் பயதான் ஏதோ சூட்சி செய்திருக்கிறான். இருக்கட்டும், கண்டுபிடிக்காமலா விட்டுடுவோம்'' ஒருவர்யோசனை.

"சேசே! அதெல்லாம் இருக்காது! அவனுக்குத் தெரியும், முருகனைத் தொட்டா, அய்யா மானம் கப்பலேறி, அய்யா வைகுண்டம் போய்ச் சேரணுமிங்கிறது'' மற்றவர் மறுப்பு.

"இல்லையில்லை, அவன் ஏதோ சூழ்ச்சிதான் செய்திருக்கான். ஆளைத்தூக்கிட்டுப் போயி, பயமுறுத்தி வெறட்டிடுவான் பாரேன்'' இன்னொருவர் முடிவு.

எல்லோரும் நம்பினர் "முருகன் கொல்லப்படவில்லை மறைக்கப்பட்டிருக்கிறான்'' என்று. அவர்கள் எல்லோர் முடிவும் அழகிரிக்குப் பயித்தியக்காரத்தனமாகத்தான் தோன்றியது. ஒன்றும் பேசாது உட்கார்ந்து கிடந்த அவன் எழுந்தான். ஏதோ ஒருவித ஆவேசத்துடன் "இல்லையில்லை, இந்தப் பாவிப் பயல் முருகனைப் பலிவாங்கி என் குடும்பத்தைக் கெடுத்துப் போட்டான். பழிக்குப்பழி வாங்காமே விடுகிறேனா பார்'' என்று முழக்கமிட்டான்.

வஞ்சம் தீர்க்கும் நெஞ்சுறுதியுடன் குடிசை நோக்கி வந்துகொண்டிருந்த அவனுக்கு, மற்றோர் பலமான அறை. அடடா! பெரும் அதிர்ச்சி. ஒரு துக்கச் செய்தி. மயக்கமுற்றுக் கீழே விழுந்துவிட்டான். வீறுபெற்றெழுந்த கிழச்சிங்கம் அடியற்றுக் கீழே சாய்ந்தது, தன் ஒரே மகள் அமிர்தம், தன் கணவனை இழந்தாள் என்று அறிந்ததும்!

மறுவாரம்! ஒருநாள்!! இருள் வேகமாக வந்துகொண்டிருக்கின்றது. அதைவிட வேகமாக, அழகிரி வந்துகொண்டிருந்தான், ஜெமீனை நோக்கி. இரவு, பகல் உறக்கமில்லாமல், படுக்கையிலே

நினைத்திருந்து நோக்கினும் காயும் அனைத்துநீர்
யாருள்ளி நோக்கினீர் என்று. 1320

இருமலினாலும், கவலையினாலும் கிடந்த அவன் செல்வனைக்கண்ட அவனது சகாக்கள், ஒரு பெருந் திரளாகப் பின்தொடர்ந்து ஜெமீன்மாளிகையின் வாயிற்படியை அடைந்தனர். பலாத்காரத்தில் இக்கூட்டம் உள்நுழைந்து ஜெமீனின் அந்தரங்க அறை வரையும் சென்றுவிட்டது.

கூட்டத்தைக் கண்டு குழம்பினார் ஜெமீன். அப்பாவியின் முகத்தைக் கண்டு பதைபதைத்தான் பாட்டாளி அழகிரி. "என் அருமை மகன் முருகன் எங்கே? சொல்லிவிடு, நாங்கள் போயிடறோம். இல்லேன்னா..." என்று கெஞ்சும் குரலில் பயமும், பயமும் கலந்து கேட்டான் அழகிரி. அதற்குப் பதில் கூற வகையறியாது நடுநடுங்கி மவுனம்சாதித்த அக் கல்நெஞ்சனின் முகத்தை உற்றுப் பார்த்தான் அழகிரி. அந்தத் தீயோன் நடத்திய நாடகங்கள் யாவும் அவன் முகத் திரையில் தெரிந்தன. குமுறிய பாட்டாளி அழகிரி அவன்மேல் பாய்ந்தான். அவன் ஓங்கிய கை நிற்கவில்லை. அவனது கூரிய அரிவாள் தன் கடமையைச்செய்யத் தவறவில்லை. செல்வச்செருக்குக்கொண்ட செல்வநாயகத்தின் தலை கீழே உருண்டது. அதனின்று வேகமாய்ப் பாய்ந்து பீறிட்ட சிவப்பு இரத்தத்திலே ஒருவித மகிழ்ச்சியும், வெற்றியும்கண்டான் அழகிரி. அவனையறியாமல், உரத்த குரலில் ஒரு சிரிப்பும் சிரித்தான்.

இதற்குள் 'பட், பட்' என்ற வெடிகுண்டுசப்தம். ஒருபெரும் போலீஸ்படை உள்நுழைந்தது. திடுக்கிட்டுத் திரும்பிய அழகிரியின் தலையில், துப்பாக்கியின் பின்புறத்தால் தாக்கப்பட்ட பலமான அடி. கீழே விழுந்தான். அழகிரியும், இன்னும் சிலரும் சிறைப்படுத்தப்பட்டனர். கூட்டம் கலைக்கப்பட்டது.

அழகிரியின் மனைவி வீரம்மாள், தன் கணவனிடமிருந்து, ஒரே செல்வமான இருமலில் கொஞ்சத்தைப் பெற்றுக்கொண்டு, இருமி இருமி வதைகிறாள். இளம் விதவை அமிர்தம், தன் பிறந்த வீட்டையும், புகுந்த வீட்டையும் நினைந்து நினைந்து பொருமிக்கிடக்கிறாள் ஒருமணி தன் உயிருடன் எரிக்கப்பட்ட இடம் இவ்விடம் என்று அறிந்துதானோ என்னவோ, ஜெமீனின் மாட்டுத் தொழுவத்தில் கட்டப்பட்ட பசுக்கள் யாவும் விநாடிக்கொருமுறை, மறைந்த —இல்லையில்லை, மறைக்கப்பட்ட அவ்விளைஞனை நினைத்து நினைத்துக் கதறியவண்ணமேஇருந்தன. தன் கைகளைப் பின்னால் கட்டிக்கொண்டு, தலையில் பலமான கட்டுகளுடன், சிறையில் அங்குமிங்கும் சிந்திய கண்ணீருடன்,

இல்லை தவ(று)அவர்க்(கு) ஆயினும் ஊடுதல்
வல்ல(து) அவரளிக்கு மாறு.

முணுமுணுத்தவண்ணம் உலவிக்கொண்டிருக்கிறான் அழகிரி.

"வாழ்விலும், தாழ்விலும் என் ஒரே துணையாக இருந்த என் மனைவி வீரம்மாள், இன்னும் கொஞ்சம்நாளில் இருமல் நோய்க்குப்பலி! என் மகன் முருகன், பணக்காரனின் சூழ்ச்சிக்குப்பலி! இருபது வயதுக்குள்ளாகவே தன் கணவனை இழந்த என் மகள் அமிர்தம், பாழும் சமூகத்தின் கட்டுப்பாடுகளுக்குப் பலி. நான்............ நேர்மை, நாணயம், நியாயம் இவற்றில் குறையாது வாழ முயன்ற நான்—செல்வநாயகத்தின் வெகுநாளைய அடிமையாகிய நான்—ஜெமீனைக் கொலைசெய்த கொலைகாரனும்! நான் பாழும் வறுமைக்கும. சூழ்நிலைக்கும்பலி. இவை யாவற்றிற்கும் காரணம்? பூர்வஜென்ம பலன்தானோ? அப்படித்தானே!"

அவன் மனப் பிராந்தியத்திலிருந்து கிளம்பிய ஒரு ஒலி கேள்வி எழுப்ப, அந்த அஞ்சா நெஞ்சனின் உறுதியான பல கட்டுகளைக்கொண்ட தலை, அதற்குப் பதில் கூறும் முறையில் பக்கவாட்டில் இருமுறை அசைந்து "இல்லவே இல்லை" என்று பதில்கூறிற்று. அவ்வேளையில் அவன் இருமிய வேதனை தரும் இருமல் சத்தம் அவன் நெஞ்சுறுதியை மெச்சி, உறுதிப் பதிலுக்கு, கதவைத்தட்டுவதுபோல் இருந்தது. அப்பொழுதுதான் அவன் தெளிந்தான்—"இந்தப் பூர்வ ஜென்மக் கதையெல்லாம் செல்வநாயகத்தின் சூழ்ச்சிகளை மறைக்கவே தயாரிக்கப்பட்ட போர்வைகள்" என்று. ★

விற்பனைக்குத் தயார்!

5000 கலர் கொசு வலைகள்

நூற்றுக்கணக்கில் ஒன்றுக்கு ரூ. 5—0—0 வீதம்
ஆயிரக்கணக்கில் ஒன்றுக்கு ரூ. 4—8—0 வீதம்

மொத்த ஆர்டர்கள் எதிர்பார்க்கப்படுகின்றன!

ஜி. எஸ். மணி C/O மகிழ்ச்சி,
விருதுநகர்.

ஊடலில் தோன்றும் சிறுதுனி; நல்லளி
வாடினும் பாடு பெறும்.

பருவத் துடிப்பு

ஆசிரியர்: புரட்சிதாசன்

40 பக்கங்கள் :: விலை 8 அணா

செல்வத்தின் நிழலைக் கூட எட்டமுடியாத சீர்திருத்தவாதி சேனன், சீமாட்டி ஜெயாவின் காதலுக்குப் பாத்திரமாகிறான். ஆனால் ஜெயாவின் பெற்றோர் மணத்திற்கு பணத்தைக் காட்டி மாற்றானுக்கு அவளை மனைவியாக்க முயல்கின்றனர். சேனனின் குடும்பத்தார் பட்ட கடனுக்குக் கட்டாயப்படுத்தி தன் மகளை அவனுக்குக்கட்டிவைத்துவிடுகிறார் சொந்தக்காரர்ஒருவர். இதைக் கேள்விப்பட்ட ஜெயா தனதுஇளம் உள்ளத்தில் வேரூன்றிய பருவத் துடிப்புக்குள்ளாகித் தவிக்கிறாள். சாதாரண கதை. சுமாராகஇருக்கிறது. இன்றைய புத்தக உலக வழக்கப்படி அட்டைப் படத்திற்கும், உட்கருத்திற்கும் சம்பந்தம் கிடையாது.

* * * *

காதற்கனி

ஆசிரியர்: புரட்சிதாசன்

விலை 8 அணா :: பக்கங்கள் 48

கல்லூரி மாணவி தேவிகா கல்லூரி மாணவன் சேகர் இருவரும், மலரும் வண்டும்போல் காதற்தேன் பருகி உல்லாசப் பறவைகளாகத் திரிகின்றனர். காரியம் மிஞ்சிக் கர்ப்பமடைகிறாள், கல்யாணமற்ற காரிகை. வண்டு பறந்துவிடுகிறது. மலர் காயுடன் மண்ணில் விழுந்து மறைகிறது மானத்திற்குஅஞ்சி.

கதையின் போக்கு நன்கு இருக்கிறது. இளம் பெண்களை ஏய்த்துத் திரியும் எத்தர்களின் சகவாசங்களையும், ஏமார்ந்து அவர்கள்பின் செல்லும் கற்ற கன்னிகைகளின் குருட்டுத்தனத்தையும் நன்கு வர்ணிக்கிறார் ஆசிரியர்.

மேற்கண்ட இருபுத்தகங்களும் கிடைக்குமிடம்: கலாசக்தி பிரசுரம், 80, மேல ஆவணிமூல வீதி, மதுரை.

* * * *

கிளர்ச்சி (மாதமிருமுறை)

ஆசிரியர்: இரா.சு. தங்கப்பழம்

உரிமையாளர்:

கு. ப. ம. தர்மன் B. Com.

புலத்தலின் புத்தேள்நா(டு) உண்டோ? நிலத்தொடு
நீர்இயைந் தன்னார் அகத்து. 1323

கிளர்ச்சி காரியாலயம்,
திருமங்கலம்.(மதுரைமாவட்டம்)
ஆண்டுச் சந்தா 2—4—0
தனி இதழ் 0—1—6

முன்பு தூத்துக்குடியிலிருந்து கிளம்பி, தமிழ் நாட்டு குதர்க்க வாதிகளின் குட்டுகெட்டுகளைச் சந்திக்கிழுத்து, சவுக்கடி கொடுத்த அதே 'கிளர்ச்சி' இடையில் சிறிது காலம் நிறுத்தப்பட்டு, இன்று 15—5—52முதல் திருமங்கலத்திலிருந்து மாதம் இருமுறையாக, திராவிடமுன்னேற்றக் கழகக் கருத்துக்கள் தாங்கி வெளிவந்துள்ளது.

* * * *

தனிஅரசு (மாதம்இருமுறை)
ஆசிரியர்: A V.P. ஆசைத்தம்பி,
தனிஅரசு காரியாலயம்,
தெப்பம் வடக்கு பஜார்,
விருதுநகர்.
ஆண்டு ரூ. 3. தனி இதழ்அணா2

முன்பு மாதம் ஒருமுறை புத்தகவடிவில் வெளிவந்து, இடையில் நிறுத்தப்பட்டிருந்த இப்பத்திரிகை 25-4-52 முதல் மாதம் இருமுறையாக சிறந்த கதை, துடுக்கான அரசியல் கருத்துக்களுடனும், சினிமா செய்திகளுடனும், தி. மு. கழகப் பணியை மேற்கொண்டுவெளிவந்துள்ளது.

★

அந்தநாளும் வந்திடாதோ?

(வே. மு. இரா. புந்திரன்)

எந்தநாள்?

மாதம் மும்மாரி மழை பெய்து, நாட்டில் எங்கும் பஞ்சம் என்ற சொல் மாறி, பட்டினி என்றசொல் செவியில்விழாமல், பிச்சைக்காரன் வீட்டின் முன்னின்று பிச்சையென வினவாமல், கூலிக்காரன் வேலையில்லையெனக் கூக்குரலிடாமல், ஆறு, குளம், குட்டைகள் நீரில்லையென வானத்தை நோக்காமல், பறந்து இரைதேடும் பறவையினங்கள் தானியமின்றித் தவிக்காமல், நித்தமும் உழைத்து உருகும் பாட்டாளி கட்டத்துணியின்றி, இருக்க வீடின்றி கதறுமல், நாட்டிலே நீதியில்லையென மக்கள் மயக்கமுறுமல், எங்கும் பயிர்களும், செடிகளும், மரங்களும் தளிர்த்துப், பூத்துக், காய்த்துப், பழுத்துக் குலுங்க, அதைக்கண்டு பறவைகள் ஆனந்தகீதம் பாடி ஆகாயத்திலே வட்டமிட, அதன் அழகைக்கண்டு மனிதன் மனமகிழும் அந்தநாளும் வந்திடாதோ?

உலகமென்னும் இரதத்திலே அறிவென்னும் இருபரிகளைப்பூட்டி, சமத்துவமெனும் கடிவாளம்பற்றித், திடமான இதயத்துடன் நான் ஓர் தமிழன்; இதேபோல் ஒவ்வொரு தமிழனும் எனதுசகோதரன் என்ற மனப்பான்மை கொள்ளும் அந்த நாளும் வந்திடாதோ?

முதலாளி என்பவர் ஈகை என்ற தன் கரங்களால், குணம் என்னும் வில்லைக்கொண்டு, பணம் என்னும் அம்பால், உழைத்து உழைத்து உருகும் பாட்டாளிமீது மனமிரங்கி எய்யும் அந்தநாளும் வந்திடாதோ?

பொறாமை இருக்கிறதே, அது தீயினும் கொடியது. ஓர் பயன் படத்தக்க அறிவாளி தோன்றினால் அவரை ஒழித்துக்கட்ட நினைக்கும் மனிதப்பதருமுண்டு. அப்படியயல்லாமலா, அன்பில் உதயமான இயேசுவை ரோமர்கள் சிலுவையில் அறைவார்களா? சாந்தமே உருவான காந்தியை துப்பாக்கியால்சுடுவானா? பாடலிலேயே தன் வாழ்வைப் பாழ்படுத்திய பாரதியை ஓர்வேளை உணவு கிடைக்க வழியின்றி உயிர் துறக்கச்செய்வார்களா? இருக்கும் போது எறிட்டுப் பாராமல் இறந்த பிறகு வியந்தோதுவது நம் நாட்டாரின் வழக்கம் என்பதுபோல் பாரதிக்கு இப்போது நிதி; அவர் பெயருக்கு எட்டையாபுரத்திலே ஞாபகார்த்த மண்டபம். எல்லாம் வேஷம். அப்படியின்றி, அறிவாளிகளை எற்றிப்போற்றி மென்மேலும் அவர்களுக்கு உதவிபுரியும் அந்த நாளும் வந்திடாதோ!

பகுத்தறிவில்லாத தேனீக்களும் கூட, கூடு என்னும் பெயரால் ஓர் நாட்டை அமைத்து, தனக்குத் தலைமை வகிக்க இராணி ஈயைத் தேர்ந்தெடுத்து, படைபலத்திற்கென அநேக சேவகஈக்களும், கோட்டைக்குப் பதிலாக தன் கூட்டிலே அநேக அரங்குகளைச் சித்திரித்து, பொக்கிஷம் என்ற பெயரால் தன் கூட்டிலே தேனை நிரப்பி எவ்வளவு ஐக்கியமாக ஆளுகின்றன! இதேபோல் பகுத்தறிவுள்ள நாமும் அரசாட்சி நடத்தும் அந்தநாளும் வந்திடாதோ?

போரிலே வெற்றி பெற்ற வீரனுக்கு வெற்றிமாலை சூடுகின்றனர்; அம்மாலை அவனது வெற்றியின் குறிக்கோளாய் அவன் கழுத்திலே வீரம் பேசுகிறது. மணக்கோலத்தில் வீற்றிருக்கும் மணத் தம்பதிகளுக்கு மணமாலை சூடுகின்றனர்; அம்மாலை அவர்களது வாழ்க்கையைத் துவக்கி வைக்கும் வாடாமாலை. உயர்ந்தகுடும்பத்தில் பெண்ணிற்கு முத்துமாலை சூடுகின்றனர்; அது அவளது அழகை ஆடவர்களுக்கு அள்ளி, அள்ளி வீசுகிறது. உலகத்தைத் துறந்த சந்நியாசிகள் உத்ராசமாலை சூடுகின்றனர். மாலை புனிதமானதுதான். ஆனால் அது அவனது வயிற்றிற்கு ஜீவனோபாயம் அளிக்கிறது. நாம் சூடும் மாலையாவது, நித்தமும் நேர்மையுடன் போராடி, வஞ்சகம் என்னும் வல்லூறுவின் பிடியிலிருந்து விடுபட்டு, சுயநலப் பேர்வழிக்குப் பதவியை அளிக்காமல், சித்திரவதையானாலும் சித்தம் கலங்காதவனுக்கு அளித்து, எந்நாளும் இந்நாட்டில் நீதியும், நேர்மையும், செல்வமும் சிறந்து ஓங்கவேண்டும் என்ற புகழ் மாலையாக இருக்கவேண்டும்.

அறியாமை என்னும் கவசத்தை அறவே அறுத்தெறிந்து, அறிவென்னும் சுடர்விளக்கை, கல்விஎன்னும் தூண்டுகோலால் விருத்திசெய்வோமாகின், அப்போதுவரும் அந்தநாள்

தவறிலர் ஆயினும் தாம்வீழ்வார் மென்றோள்
அகறலின், ஆங்(கு)ஒன் றுடைத்து. 1325

எழுதிப் பழகணும்

[மி. வ. அந்தோணி—பம்பாய்.]

எழுதிப் பழகணும் நல்லா எழுதிப் பழகணும்
ஓய்வு நேரத்தை வீணாக்காமலே தமிழ் (எழுதி)

சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்
மந்திரமும் தந்திரமும் வெறும் சொல்பழக்க மென்பார் (எழுதி)

மதியை வளர்க்கும் நூல்களெல்லாம் படிச்சிப் பழகணும்
மாண்புமிகும் தமிழர் வாழ்வை மலரச் செய்யணும்
மனித ரெல்லோரும் சமமென்ப துணரணும்
மடமை நீங்கி மக்கள் பொதுவுடமை காணணும் (எழுதி)

அன்புடனே எல்லோ ரிடமும் பேசிப் பழகணும்
அறிஞர்களின் சொல்படி கேட்டு நடக்கணும்
ஆகாப் பழமைகளை ஒழித்துக் கட்டணும்—எதையும்
ஆராய்ந்து முடிவு செய்யணும் (எழுதி)

தமிழ்நாட்டு நாகரீகம் பேணி நடக்கணும்—நம்
தாய்மொழியைச் சிதைக்காது பாதுகாக்கணும்
தமிழ்நாட்டில் தனிஅரசு தழைக்கச் செய்யணும்—எங்கும்நம்
தமிழ்க்கொடியைப் பறக்க விடணும் (எழுதி)

காஞ்சனா

திரைப்பட விமர்சனம்

மாத்தூர் ஜமீன்தார் புஷ்பநாதன் (K. R. ராமசாமி) படித்துப் பட்டம் பெற்ற இளைஞன். அவன் தாய் பொன்னம்மாள் (P. S. ஞானம்) கணவனை இழந்தவள். மனோகர் (M. N. நம்பியார்) என்ற பள்ளித்தோழனின் தூண்டுதலினால் தன் ரொக்கம் ரூபாய் பூராவையும் மில் அமைக்கும் ஏற்பாட்டில் ஈடுபடுத்துகிறான்

தாசி மரகதத்தின் (M. R. சந்தானலக்ஷ்மி) மகள் பானுமதி (பத்மினி) தன் குலசம்பிரதாயங்களைத் தகர்த்து புஷ்பநாதன்மீது மெய்க்காதல்கொள்கிறாள். ஜமீன்தாரும் அவள்மீது உயிராக இருக்கிறார். நாளடைவில் இவ் விஷயம் ஜமீனின் புதுக் கணக்குப்பிள்ளை ஏழுமலை (T. S. துரைராஜ்) மூலம் அறிந்துபதறி, விரைவில் பெண் பார்த்து விவாகம் செய்ய தன் மகனைத் தூண்டுகிறாள் பொன்னம்மாள்.

ஜமீனின் குடிசை ஒன்றில் பழைய கணக்குப்பிள்ளை நீலமேகம் (K. துரைச்சாமி) தன் பேத்தி காஞ்சனா (லலிதா) வுடன் வறுமையின் சிகரமாக வாழ்கிறார். காஞ்சனாவின் அண்ணன் சபேசன் (மனோஹர்) பட்டணத்தில் டாக்டர் பரீக்ஷை பாஸ் செய்து உத்தியோகத்தில் அப்பொழுதுதான் அமர்கிறான். வாடகைப் பாக்கிக்காக நீலமேகத்தை ஏழுமலை கண்டபடி திட்டி தொல்லை கொடுக்கிறான். வீட்டைவிட்டு வெளியேற்றித் தான் அதில் வந்து இருக்கவும் சதி செய்கிறான். இத் துர்எண்ணத்தில் ஒருநாள் நீலமேகத்திடம் அளவுக்குமீறி நடந்துகொள்கிறான். தனது தந்தையின் அன்பிற்குப் பாத்திரமான நீலமேகத்திடம் ஏழுமலை நடந்துகொண்டதைக் கேட்ட புஷ்பநாதன், அவரிடம்மன்னிப்புக்கேட்கவந்த இடத்தில் காஞ்சனாவைச் சந்திக்கிறான். தங்கத்தில் கடைந்த மலையாளப் பதுமைபோன்றிருந்த காஞ்சனாவின் கவர்ச்சிக்குள்ளாகி அவளைக் கல்யாணம் செய்து கொள்ளுகிறான்.

புஷ்பநாதனை அந்தரங்கசுத்தியுடன் காதலித்த பானுமதி அதிர்ச்சிக்குள்ளாகிறாள். குலத் தொழிலுக்குத் தூபம் போடுகிறாள் அவள் தாய். ஆனால் அவளிடம் பலிக்கவில்லை. தன் கல்

ஊடலில் தோற்றவர் வென்றார் அதுமன்னும்
கூடலிற் காணப் படும்.

யாணத்தினால், தான் பானுவின் மீது கொண்ட பாசம் துளியும் குறையாது என்று கூறுகிறான் புஷ்பநாதன்.

பல இன்பக் கனவுகள் கண்ட காஞ்சனாவிற்கு தன் கணவன் பானுவுடன் தொடர்பு கொண்டுள்ளது தெரியவருகிறது. அத்துடன் அவள் குப்பைமேட்டிலிருந்து கொண்டுவரப்பட்டவள் என்பதும் மாமியாலும் மணவாளனாலும் அடிக்கடி இடித்துக் காட்டப்படுகிறது. பெற்றகுழந்தையைத் தொடும் உரிமைகூட மறுக்கப்படுகிறது. இதனால் துன்பமும் வேதனையும் உச்சத்தையடைகிறது. நிம்மதி இழக்கிறாள்.

பானுவும் நிம்மதி இழக்கிறாள் கல்யாணத்திற்குப்பின் தன் காதலரின் அன்புகுறைந்துவிட்டதோ என்று ஏங்குகிறாள். இவர்கள் இருவரின் இடையீட்டால் புஷ்பநாதனும் அமைதி இழக்கிறான். அகப்பட்டதைச் சுருட்டும் கபடன் மனோகரின் நயவஞ்சகத்தையறியாது, தன் நிலபுலனெல்லாம் இழந்து, கடன் நெருக்கடிக்குள்ளாகிறான்.

இந்நிலையில் ஜமீனின் தூரபந்துவான டாக்டர் சீதா(குமாரி)வும், அவள்தாயும் (K.N.கமலம்) விருந்தாளியாக வருகின்றனர். சீதா சபேசனின் காதலி. சீதாவின் அழகில் சபலமுற்ற புஷ்பநாதன், அவள் தாராளமாகப் புழங்குவதை தவறாக அர்த்தம் கொண்டு குட்டிபோட்ட பூனைபோல், அவளைச் சுற்றிச்சுற்றி வளையமிட்டுத்திரிகிறான். இதைக் கண்ணுற்ற காஞ்சனாவும் தவறாக நினைத்துவிடுகிறாள். சந்தர்ப்பம் சந்தேகத்தை வலுவடையச்செய்கிறது. இதனால் அவர்கள் முன்னிலையில் காஞ்சனாவிற்கு அடி விழும்அளவிற்கு காரியம் மிஞ்சி விடுகிறது.

அன்றைய நிகழ்ச்சியால் வேதனையடைந்த காஞ்சனா இரவே யாருக்கும் தெரியாமல் வீட்டைவிட்டு வெளியேறுகிறாள். கடைசியாக அவளைக் கண்டுபிடித்து குழந்தையை மட்டும் பிடுங்கிக்கொண்டு காஞ்சனாவை அனாதையாக விட்டுவந்துவிடுகிறான்.

சீதாவின் நடத்தையைத் தன் தங்கைமூலம் அறிந்த சபேசன் அவளை வெறுத்து, வேலையைக் காலிசெய்துவிட்டு வேற்றூர் சென்றுவிடுகிறான்.

தன் மகன் காஞ்சனாவைக் கூட்டி வராததைக் கண்டித்து. குடும்பகௌரவம் குலைந்துவிடும் என்று எப்படியும் அவளைக் கூட்டிவரும்படி நச்சரிக்கிறாள். அவனும் தேடாத இடமில்லை. காஞ்சனை அகப்பட்டால்தானே. குழந்தையைப் பானுவிடம் ஒப்படைத்து வளர்த்துவருகிறான்.

குழந்தையிடமிருந்து பிரிக்கப்பட்ட காஞ்சனா தன் உயிரை

மாய்த்துக்கொள்ள கிணற்றில் விழுகிறாள். ஆனால் மூர்ச்சை தெளிந்தபோது தான் காப்பாற்றப்பட்டு, சீதாவின் இடத்தில் இருப்பதை அறிகிறாள். சீற்றம் கொள்கிறாள். ஆனால் சீதாவின் மூலம் உண்மை அறிந்து தான் செய்த தவறை எண்ணிக் கலங்குகிறாள்.

பிரிந்தவர்கள் கூடுகிறார்கள் சபேசன் சீதாவின் திருமணத்தின்போது. புஷ்பநாதன் காஞ்சனாவின் சம்மதத்துடன் பானுவையும் கல்யாணம் செய்துகொள்ள விரும்பி, அவளிடம் கூறுகிறான். மரண வாயலில் நின்ற அவள் அதை விரும்பாது, காஞ்சனாவைக் கலங்கவிடாது கடைசிவரை கவனித்துக்கொள்ளும்படி கூறிவிட்டு இயற்கை எய்துகிறாள்.

* * * *

இப்படம் கோவை பக்ஷிராஜா ஸ்டூடியோவில், திரு. எஸ். எம். ஸ்ரீராமுலு டைரக்ஷனில் தயாரிக்கப்பெற்றது. கதை: லக்ஷ்மி. பாடல்கள்: திருவாளர்கள் பாபநாசம் சிவன், நாமக்கல் ரா. பால சுப்பிரமணியன், வி. ஏ. கோபால கிருஷ்ணன். பின்னணி கீதம் பாடியவர்கள்: பி. ஏ. பெரியநாயகி எம். எல். வசந்தகுமாரி, ஜெய லக்ஷ்மி. நடனம்: கோபிநாத்.

கதை: தாசி, ஏழை, ஜமீந்தார் ஆகிய மூன்று குடும்பங்களைப் பின்னி இழுத்துச் செல்கிறது கதை. இவ்வளவு அழகமாக ஒரு தாசிகுலப் பெண் இருப்பாளா என்பதுதான் கேள்விக்குறிய விஷயமேதவிர, மற்றப்படி அதிகம் கூறுவதற்கில்லை. அளவுக்கு மிஞ்சிய கஷ்டத்திற்குள்ளாகும்போது, பெண்கள் மரணத்தைத் தழுவுவதைத்தவிர வேறு வழியே இல்லை என்பது போல், வரும் எல்லாக் கதைகளிலும் காண்பிக்கப்படுகிறது. இதிலும் காஞ்சனா கிணற்றில்விழுகிறாள். இதைவிடுத்து ஏதாவது அனாதை ஆஸ்ரமத்தில் சேர்ந்து பெண்குலத்திற்கு ஊழியம்செய்ய முற்படுவதாகமாற்றியிருக்கலாம். அதேபோல் கடைசியாக தன் மரணப் படுக்கையில் பானுமதி தன் மூன்று லக்ஷம் ரூபாயை குழந்தை மோகன் பெயரில் பேங்கில் போட்டிருப்பதாகக் கூறுவதை, தன்போன்று ஏமாற்றமடைந்தோ, அல்லது வாழ்க்கையில் வழுக்கிவிழுந்தோ தவிக்கும் பெண்களின் நலம்பேணும் ஆச்சிரமம் கட்டவோ, அல்லது பெண்கள்கல்விக்காகவோ எழுதிவைத்துச்சீர்திருத்தம்காட்டலாம் சென்ற சென்ற இடங்களில் எல்லாம் ஏழை மலை வெற்றிலை பாக்குகளை எடுத்து சட்டைப் பையுக்குள் அமுக்குவதைப் பலமுறைகாட்டியவர்கள், காஞ்சனா கிணற்றில் விழுந்து, மீட்கப்பட்டதைச்சிறிதுகாட்டியிருக்கலாம்.

நடிப்பு: லலிதாவும், பத்மினியும் தாங்கள் ஏற்றுக்கொண்டுள்ள பாத்திரங்களில் அப்படியே ஐக்கியமாகிவிட்டார்கள். ஒவ்வொரு கட்டத்திலும் உணர்ச்சியுடன், பிரமாதமாக நடித்துள்ளனர். அடுத்தபடியாக பி.எஸ். ஞானம் பொருத்தமாக, பாத்திரத்திற்கேற்ப நன்கு நடித்துள்ளார். இவ்வளவு உயர்வாக இதற்குமுன் எந்தப்படத்திலும் இவர் நடித்ததில்லை. குமாரிக்குக் கொடுக்கப்பட்ட பாகம் மிகவும் குறைவு. சுமாராகவே நடிக்கிறார். எம். ஆர். சந்தான லக்ஷிமியும் அப்படியே.

தாத்தாவாக நடிக்கும் கே. துரைசாமி பிரமாதமாக நடித்து நல்ல புகழைத் தட்டிக்கொண்டு போய்விட்டார். அவர் நடிப்பு ஏ1. சில கட்டங்களில்தவிர மற்றபடி கே.ஆர். ராமசாமியின் நடிப்பு சுமாராகவேஇருக்கிறது. வேஷ்டி கட்டி, ஜரிகைத்துண்டுடன் வரும்போது, ஏற்ற பாத்திரத்திற்கேற்பவாட்டசாட்டமான முகவாக்குக்கூட இல்லை.

மனோஹரையும், நம்பியாரையும் நன்குபயன்படுத்திக்கொள்ளவில்லை. இவர்களுடைய பாகங்கள் ஆங்கில வனுந்திரப்படங்களில் வருவதுபோல் அப்படிஅப்படியே ஒட்டவைக்கப்பட்டுள்ளது. அங்கொன்றும்இங்கொன்றுமாக பணத்தை மறைமுகமாக (நம்பியார்) கொள்ளை அடித்து வருவதைக் கொஞ்சமாவது விளக்கிக் காட்டி இருக்கலாம். டி. எஸ் துரைராஜ் பொருத்தமாக, நன்கு நடித்துள்ளார்.

பாடல்கள்சுமாராகவே அமைந்துள்ளன. "அழகுநிலா வாவா" என்ற பாடல் இனிமையாக இருக்கிறது. ஒலி, ஒளிப் பதிவும், எடிட்டிங்முதலியன திருப்திகரமாக அமைந்துள்ளது கதையின் முன்பகுதி சற்று மெதுவாகச் செல்கிறது. பின்பகுதி விறுவிறுப்பாக இருக்கிறது. 'மனச்சாட்சி' கூறுவதாகக் காட்டப்படும் கட்டங்கள், கதையின் ஜீவநாடியாகவும், விறுவிறுப்பாகவும் அமைந்திருக்கின்றன.

டைரக்டர் திரு. ஸ்ரீராமுலுவின் திறமைக்கு இப்படம் ஒரு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. வசனங்கள் எதுகை மோனையுடன் தடபுடல் செய்யாவிட்டாலும், எளிய நடையில் இங்கிதமாக அமைந்துள்ளது,

மொத்தத்தில் இது ஒரு பொழுதுபோக்குப் படமல்லவென்றாலும் உணர்ச்சிமிக்க சித்திரம். பெண்கள் அவசியம் கண்டு கண்ணீர்விட்டுத் திரும்ப வேண்டிய படம்.

ஊடுதல் காமத்திற்(கு) இன்பம் அதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின். 1330

தமிழ்ப்பட ரசிகர்களுக்கு

ஞாபக சோதனைப் போட்டி 3

[கட்டணம் கிடையாது]

முழுவதும் சரியான விடைக்கு

பரிசு ரூ. 10

ஒன்றுக்கு மேற்பட்டவர் சரியான விடை எழுதி அனுப்பினால் பரிசுத் தொகை சமமாகப் பிரித்துக்கொடுக்கப்படும்

வெற்றி பெற்றவர்கள் ஜாபிதாவும் சரியான விடையும் அடுத்த இதழில் பிரசுரிக்கப்படும்

1 — ல —
2 — — ந்த —
3 ப — — — தி
4 — ர — தி —
5 என் — — —
6 பக்த — — — ன்
7 — க் — தா —
8 — — வதி
9 — ரி — — — தி —
10 — — — யின் — த —

பெயர்...

விலாசம்...

ஊர்.. ஜில்லா.............................

போட்டி நிபந்தனைகள்

1 கட்டத்திலுள்ள கோடிட்ட இடங்களைப் பூர்த்திசெய்தால் இதுவரை வெளிவந்துள்ள தமிழ்ப் படங்களின் பெயர்கள் வரும்.

2 மேற்கண்ட கூப்பனை மையினால் பூர்த்தி செய்து, கவரில் வைத்து, **"ஆசிரியர், ஞாபக சோதனைப் போட்டி, மகிழ்ச்சி இல்லம், விருதுநகர்"** என்று எழுதி **30—6—52**க்குள் அனுப்பப்பட வேண்டும். உள்ளூர் வாசிகள் நேரில் கொண்டுவந்து கொடுக்கலாம்.

3 **முதல் கூப்பன்** அச்சுக் கூப்பனிலும், அதன்பின் தனித் தாளிலும், எத்தனை கூப்பன்கள் வேண்டுமானாலும் ஒருவர் எழுதியனுப்பலாம். ஆனால் **100 கூப்பன்களுக்கு ஒரு அச்சுக்கூப்பன் வீதம் எழுதப்படவேண்டும்.**

4 தனித்தாளில் எழுதப்படும் கூப்பன்கள், தாளின் ஒரே பக்கத்தில் தெளிவாக, தனித்தனியாக வரிசை எண் போட்டு எழுதப்படவேண்டும்.

5 பூர்ணமாக பூர்த்திசெய்யப்பட்ட கூப்பன்களே மட்டுமே கவனிக்கப்படும்.

6 கூப்பன்கள் தபாலில் பத்திரமாக வந்துசேர, அவற்றை மூடிய கவர்களில் அனுப்புவதே சிறந்தது. எங்களுக்கு வந்து சேராமல், வழியில்தவறும் கூப்பன்களுக்கு நாங்கள்ஜவாப்தாரியல்ல.

7 இப்போட்டி சம்பந்தமாக யாதொரு கடிதப் போக்குவரத்தும் வைத்துக்கொள்ளப்பட மாட்டாது.

8 எவருமே சரியான விடை அனுப்பாவிடில், போட்டி ஆசிரியரின் தீர்ப்புப்படி பரிசுத் தொகை பிரித்துக்கொடுக்கப்படும்.

9 மேற்கண்ட நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டுத்தான் நேயர்கள் இப்போட்டியில் கலந்துகொள்ளவேண்டும்.

விருதுநகர் நியூ முத்துவில்

மதுபாலா, பிரேம்நாத் நடித்த

புரட்சி வீரன்

இப்பொழுது நடைபெறுகிறது

அடுத்து வர இருப்பவை:

பரணியின் காதல் (தமிழ்)

ஜெமினி மூன்று பிள்ளைகள்

ஞாபக சோதனைப் போட்டி 2 முடிவு

சரியான விடை

1	கைதி	6	கிருஷ்ண நாரதி
2	கஞ்சன்	7	இந்திரசபா
3	தியாகி	8	காலேஜ்குமாரி
4	சதி அனுசூயா	9	சதிமுரளி
5	வனமோஹினி	10	ஆனந்தாஸ்ரமம்

இப்போட்டிக்கு எவருமே சரியான விடை அனுப்பவில்லை. எனவே போட்டி ஆசிரியரின் தீர்ப்புப்படி கீழ்க்கண்டவர்களுக்கு பரிசுத்தொகை ரூபாய் 10ம் பிரித்து அனுப்பப்பெற்றிருக்கிறது.

முதற் பரிசு (1 தப்புள்ள விடை) ரூ. 5

R. ரத்தினம், 299, நாயக்கமார் தெரு, விருதுநகர்.

2வது பரிசு (2 தப்புள்ள விடை) ரூ. 3

R. அசோகன், 4, பண்டார தெரு, விருதுநகர்.

3வது பரிசு (3 தப்புள்ள விடை) ரூ. 2

1 M செய்யது, ஹமீதியா வாஷிங் கம்பெனி,
செ. மீ. பெண்பாடசாலைத் தெரு, விருதுநகர்.

2 P. மாணிக்கவாசகம் c/o P. முத்துச்சாமி பிள்ளை,
தம்பா பிள்ளை தெரு, இராஜபாளையம்.

3 P. R. தனுஷ்கோடி,
70/14, வள்ளிக்குட்டி நாடார் தெரு, விருதுநகர்.

4 S. மகாலிங்கம் c/o P. S. ரத்தினசாமி நாடார்,
எண்ணைக்கடை, முனிசிபல்ஆபீஸ்ரோடு, விருதுநகர்.

5 V. முத்துப்பாண்டியன், c/o
ஸ்ரீ ஸ்ரீனிவாச மோட்டார் சர்வீஸ், விருதுநகர்.

6 ஹெக்டர் A. சாம்சன், c/o முத்து சலூன்,
16, சேதுராஜா தெரு, தூத்துக்குடி.

7 T. K. ஸ்டாலின், 23, உள்தெரு, விருதுநகர்.

8 M. மாணிக்கம், 4/13, மோகன் மாவுமில், விருதுநகர்.

மேற்கண்ட 3வது பரிசு பெற்ற 8 பேர்களுக்கும், மகிழ்ச்சி ஆசிரியர் கா. சதானந்தம் எழுதிய "15 நிமிடங்கள்" என்ற புத்தகம் அனுப்பப்பெற்றுள்ளது.

செந்தமிழ் நாட்டுச் சிறுவர்களுக்கு
திடகாத்திரமளிக்கும்
சிறந்த உணவு எங்கள்

ராஜா பார்லி பிஸ்கட்
ராஜா குளுகோ பிஸ்கட்
ராஜா ஜிஞ்சர்நட் பிஸ்கட்

ஸ்தாபிதம்: 1926

ராஜா பிஸ்கட் கம்பெனி,

115, **திண்டுக்கல் ரோடு, மதுரை.**

உரிமையாளர்: ஆ. சங்குபிள்ளை.

கிளை: 2, டவுன்ஹால் ரோடு, காலேஜ் ஹவுஸ்,

L. V. ஷண்முகம் பிள்ளை மதுரை.

CONNEMARA PUBLIC LIBRARY
25 SEP 1955

லைன், கலர், ஆப்டோன்

பிளாக்குகள்

சினிமா சிலேடுகள்
ரப்பர் ஸ்டாம்புகள்
செய்யுமிடம்

ராஜன் & கோ., சிவகாசி.

சத்திய வேதமாகிய
பைபிளை ஆழ்ந்து படிக்க
வேத மாணக்கர் ஐக்கிய
சங்கத்தாரால் தமிழில்
வெளியிடப்பட்டிருக்கும்
வேதோபதேசவினுவிடை
என்ற புஸ்தகம்
கிடைக்கும்.

விலை: சாதா பைண்டிங்
ரூ 0—12—0

அட்டைப் பைண்டிங்
ரூ. 0—14—0

தபால் சார்ஜ் வேறு

குணம், மணம்
நிறைந்த
எட்வர்ட் காபி
உபயோகியுங்கள்

"எட்வர்ட் காபி ஒர்க்ஸ்"

காளியம்மன் கோவில் தெரு, விருதுநகர்.

ஜூன் 14வ முதல்

மதுரை ஸ்ரீ மீனாக்ஷி டாக்கீஸிலும்
மற்றும் தமிழ் நாட்டின் பல முக்கிய நகரங்களிலும்

குதூகல ஆரம்பம்!

பரணியின்

காதல்

தமிழ்

பூரண உரிமையாளர்:

G. P. பிலிம்ஸ், பொறையார்.

ஜி. பி. பிலிம்ஸ், நாடார்ஸ் கார்டன்,
9, டாக்டர் அழகப்ப செட்டியார் ரோடு, வேப்பேரி, சென்னை 7.
ஜி. பி. பிலிம்ஸ், 301, மேலமாசி வீதி, மதுரை.

ஆசிரியரும், அச்சிட்டு வெளியிடுபவரும் கா. சதானந்தம்,
சதானந்தா அச்சகம், விருதுநகர்.